
Regd No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

மாலை 21 மலர் 17.

# குடி அரசு

ESTD. 1924

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.



## 1948 JANUARY. 1948

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

சிறுவர் பகுதி:

# சுயமரியாதைப் பாலபாடம்.

(அண்ணா)

I

தம்பிமார்களே! எங்கள் சுயமரியாதை இயக்கம் என் தோன்றியது என்பதைப் பற்றிச் சொல்லுகிறேன். கேளுங்கள்!

உலகத்திலேயே நம் நாட்டில்தான் ஒரு அதிசயமான அக்கிரமம் உண்டு. அதுதான் பிறவியிலேயே ஒருவன் உயர்ந்தவன். அதாவது உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன். மற்றொருவன் தாழ்ந்தவன். அதாவது தாழ்ந்த ஜாதியைச் சேர்ந்தவன் என்று ஏற்படுத்தப் பட்டிருப்பதாகும். உங்களுக்கு இன்னும் நன்றாக விளங்கும்படி சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள்!

இதோ! உங்களுடன் இருக்கும் **ராமசுப்பு** பிறவியில் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவன். அதாவது **பார்ப்பான்.** முதல் ஜாதியைச் சேர்ந்தவன். அதற்கடுத்தாற்போல் நிற்கும் **சிவன்** பிறவியில் சூத்திரன். நாலாம் ஜாதியைச் சேர்ந்தவன். அதோ அந்தக் கடைசியில் நிற்கும் **கருப்பன்** பிறவியிலேயே **தீண்டப்படாதவன்.** அய்ந்தாவது ஜாதியைச் சேர்ந்தவன். பள்ளிக்கூடத்தில் நாங்கள் எல்லாம் ஒன்றாகத்தானே இருக்கிறோம்; ஒன்றாகத்தானே விளையாடுகிறோம். எங்களுக்குள் எவ்வித வித்தியாசமும் கிடையாதே, என்று நீங்கள் சொல்லுவீர்கள்.

வாஸ்தவம்தான். பள்ளிக்கூடத்தில் வித்தியாசம் பாராட்டக் கூடாது என்பது சர்க்கார் சட்டம். அந்த சட்டம் வருவதற்கு முன்னால் எந்த நிலைமை இருந்தது தெரியுமா? கருப்பனைச் சேர்ந்தவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதே கிடையாது. சுயமரியாதை இயக்கம் வேலை செய்த பிறகு, சர்க்கார் சட்டஞ் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அந்தச் சட்டம் வந்த பிறகு, பள்ளிக்கூடத்தில் ஜாதி வித்தியாசத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ள முடியாமல் போய்விட்டது.

அது ஒருபுறமிருக்க நம் நாட்டில் இந்த ஜாதி வித்தியாசம் எப்பொழுதுமே இருந்து வந்ததா? அல்லது எப்பொழுது முதல் இருந்து வருகிறது? என்பதை நீங்கள் அறிய விரும்புகிறீர்கள் அல்லவா? ஆம். விபரமாகச் சொல்லுகிறேன். கேளுங்கள்!

சரித்திர காலத்திற்கு முன்பு இருந்தே இந்த நாட்டிலேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வருகிறவர்கள் திராவிடர்கள். அதனால் தான் நமது நாட்டுக்கும் திராவிடம் என்று வழங்கப்பட்டு வந்தது. திராவிட மக்கள் ஆதியில் பேசிவந்த மொழி தமிழ் ஒன்றேதான். ஆனால் நாளாவட்டத்தில் தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் என மூன்று மொழிகள் குறிப்பிடக்கூடியதாய்த் தோன்றின. இன்று இந்த நான்கு மொழிகளும் பேசப்படும் பிரதேசம் தான் நமது திராவிட நாடு. இப்போது இதைத்தான் சென்னை மாகாணம் என்று சொல்லுகிறார்கள்.

நமது திராவிடத்தில் அன்று வாழ்ந்து வந்த நமது முன்னோர்களிடத்தில் ஜாதி என்பதே கிடையாது. எல்லோரும் ஓர் குலம் என வாழ்ந்து வந்தனர். இன்னொரு முக்கிய விஷயமும் சொல்லுகிறேன். தமிழ் மொழியிலேயே ஜாதி என்ற வார்த்தையைக் குறிக்கும் சொல்லே கிடையாது. இதிலிருந்தே நம்மிடையே ஆதியில் ஜாதி கிடையாது என்பது நன்கு விளங்குகிறதல்லவா? ஜாதி வித்தியாசமில்லாமல் நம் நாட்டில் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்த காலம் ஒன்றிருந்தது. அக் காலத்தில்தான் மத்திய ஆசியாவிலிருந்து பிழைக்க வந்தார்கள் ஆரியர்கள். இவர்கள் முதலாவதாக வடக்கே சிந்து, கங்கை சமவெளிப் பிரதேசத்தில் தங்கினார்கள். நாளடைவில் அங்கேயே நிலையாக இருந்து கொண்டு நாடாளவும் தொடங்கி விட்டார்கள். அவர்கள் ஆண்டு வந்த இடத்திற்கு **"ஆரியா வர்த்தம்"** என்று சொல்லப்படுகிறது. ஆரியர்களிடையே பிர்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என நான்கு வருணங்கள் உண்டு. பிறவியிலேயே உயர்வு, தாழ்வு உண்டு என்பதை அவர்களது வேத, சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஆரிய மன்னர்கள் ஆரிய வர்த்தத்தை ஆண்டு வரும் நாளில் ஆரியப்பார்ப்பனர்கள் தெற்கு நோக்கி யாத்திரை வந்திருக்கிறார்கள். தெற்கே நம்நாட்டிற்கு வந்த சமயத்தில் நமது முன்னோர்கள் அவர்களை எதிர்த்தார்கள். அவர்களுடைய செய்கையான யாகம் செய்தல், மது அருந்துதல், மாமிச உணவு உட்கொள்ளுதல் முதலான காரியங்கள் நம் நாட்டு மக்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவர்களை வெறுத்தார்கள்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# சிறுவர்களின் கல்வி நிலை.

(வே. நடராசன், வயது-12)

இன்றைக்குச் சிறுவர்களாயிருப்பவர்கள்தான் வருங்காலத்தில் பெரிய அறிஞர்களாகவும், அறிவுடைய தலைவர்களாகவும் வருகின்றனர். "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்றபடி சிறுவர்கள் தகுந்த அறிஞர்களாகப் பிற்காலத்தில் ஆவதற்கு, அவர்கள் பள்ளியில் பயிலும் போதே தகுந்த சூழ் நிலைகளும், சாதனங்களும் அமைதல் வேண்டும்.

'அமெரிக்கா' என்ற பெரிய நாட்டிலே சிறுவர்களைப்பற்றிப் பள்ளியிலேயே அதிகக் கவலையுடன் கவனிக்கின்றனர். அவர்களுக்காக 'மாடர்ன் ரிவ்யூ' என்ற பெரிய புகழ் வாய்ந்த பத்திரிகையைப் பள்ளியிலேயே நடத்திச் சிறுவர்களுக்கு நாட்டின் அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம் முதலியவற்றைப் போதிக்கின்றனர். 'ஜப்பான்' என்ற நாட்டிலும் சிறுவர்களுக்காக ஒரு தனி வகுப்பு, பள்ளியிலேயே நடத்தி நாட்டின் நிலைமையைப் போதிக்கின்றனர். ஏனென்றால், அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும், ருஷியர்களும் சிறுவர்களே பிற்காலப் பிரஜைகள் எனத் தெரிந்து அதற்கேற்றபடி சிறுவர்களுக்குத்தகுந்த சூழ்நிலையைஏற்படுத்துகின்றனர். ருஷியாவிலே கல்வி முறை மிகவும் பாராட்டத்தக்கது. ஏனென்றால் 'சினிமாப் படங்களின்' மூலமாகவும், செய்திப்படங்களின் மூலமாகவும் கல்வியை மாணவர்களுக்குப் புகட்டுகின்றனர்.

ஆனால் நம் தமிழ் நாட்டை ஊன்றிப் பார்த்தால் நமக்கு ஏக்கம்தான்...! இரண்டாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தமிழ்ப் புத்தகங்களில் எல்லாம் பக்திமயப் பாடல்கள்தான். அப்பாடல்கள், சிறுவர்கள் பிற்காலத்தில், எப்படி முன்னேற்றத்துடன் வாழவேண்டும் என்பதை விளக்காமல் "மேலோக"த்திலும், "பரலோக"த்திலும் நடக்கும் திருவிளையாடல்களையும், அவைகளுக்குச் செல்லவேண்டிய வழியையும் காட்டுகின்றன! நமது சிறுவர்களுக்கு இது தேவையில்லை! நம் திராவிடச் சிறுவர்களின்பால் கல்வி மந்தியார் அவர்களுக்கு அனுதாபம் இருக்குமானால், அவர்களே வருங்கால மக்கள்; அவர்களை முன்னேற்ற வேண்டும்; என அக்கரை இருக்குமானால், இம்மாதிரிப் பாடப் புத்தகங்களில் புராண, இதிகாசங்கள் இருப்பதை நீக்கிச் சிறுவர்களுக்கு அவசியம் வேண்டியதான, விஞ்ஞானம், பொருளாதாரம், இலக்கிய பூர்விக வரலாறுகள்' நம் பழம் நாகரிகம், கலை இவைகளைப் போதிக்குமாறு செய்யவேண்டும் என்பதே என்போன்ற சிறுவர்களின் அடங்கா ஆவலும், லட்சியமுமாகும்! வணக்கம்.




## காட்சி 23.

[அந்தப்புர அலங்கார மண்டபத்தில் கைகேயி உல்லாசமாய் உலாவிக் கொண்டிருக்க, மந்தரை ஆத்திரத்தோடு மாடியிலிருந்து இறங்கி வந்து]

**மந்தரை:-** அம்மா! இனிக் கொஞ்ச நேரத்திற்குள் வரப்போகும் பேராபத்தை உணராத, போங்காலத்திற்குள்ளான கைகேயி! என்ன நீ கவலையற்று உல்லாசமாக உலாவுகிறாயே. சிறிது நேரத்தில் உன் தலை மேல் இடி விழப் போகிறது! நீ ஒழிந்தாய்! உன் மகன் அழிந்தான்! உன்நாடு நகரம் எல்லாம் பறி போகப் போகிறது! கைகேயி! நான் என்ன சொல்லுவேன்! (அழுகிறாள்).

**கைகேயி:-** என்னடி மந்தரை உளறுகிறாய்! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா? புத்தி ஸ்வாதீனமில்லையா? சற்று முன் மாடிக்குப் போகும் போது நல்ல புத்தியோடு இருந்தாயே! இது என்ன அதிசயமாய் இருக்கிறது!

**மந்தரை:-** மதிகெட்ட மனுஷியே! எனக்கொன்றும் பைத்தியமில்லை. உனக்கு ஆபத்து வந்து விட்டது. நீயும், உன் மகனும், உன் செல்வாக்கும் அழிந்து ஒழிந்தீர்கள்.

**கைகேயி:-** சீ! வாயை மூடு. பிசாசே! உளறாதே. புத்திகெட்டவளே! தசரதச் சக்கரவர்த்தியின் பட்ட மகிஷி நான். இராமனின் தாய் நான். எனது ஆசை மணாளன் சக்கரவர்த்தியும், என் அருமை மகன் இராமனும் இருக்கும் போது, எனக்கு என்னடி ஆபத்து வரப்போகிறது? உலகமெல்லாம் ஒழிந்த பிறகல்லவாடி எனக்கு ஏதாவது கஷ்டம் வர வேண்டும்.

**மந்தரை:-** அம்மா கைகேயி! உண்மையாக வந்து விட்டது கேடு. கிட்ட நெருங்குகிறது. உனக்கொன்றும் தெரியவில்லை. நாளைக்கு நாம் எல்லோரும் தெருவில் திரியும், சாதாரணப் பெண்களாக ஆகப்போகிறோம். இது உண்மை! உண்மை!

**கைகேயி:-** அடி மந்தரை! நீ என்னமோ உளறுகிறாய் என்றே கருதுகிறேன். எனக்கு என்ன ஆபத்து வர முடியும்? நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை.

**மந்தரை:-** புரியவில்லையா? கேடு காலம் கிட்ட நெருங்கியவர்களுக்கு ஒன்றும் புரியாது என்பது உண்மைதான். சொல்லுகிறேன் கேள். இராமனுக்கு அயோத்தி பட்டாபிஷேகம் நடக்கப் போகிறது. நம் வீடும் வீதியும் தவிர, ஊரெல்லாம் அலங்காரம் ஆகி விட்டது.

**கைகேயி:-** (மிக்க ஆனந்தத்தோடு) அப்படியா? உண்மையாகவா?

**மந்தரை:-** ஆமாம்! சத்தியமாக.

**கைகேயி:-** (மேலும் ஆனந்தமாக) எப்போது?

**மந்தரை:-** நாளைக்கே நடக்கப் போகிறது. அதற்கு வேண்டிய

**பெரியார் ஈ.வெ.ரா.**

எல்லாக் காரியங்களும் மிக மிகத் துரிதமாக நடைபெறுகிறது.

**கைகேயி:-** ஹப்பா! என்மனம் குளிர்ந்ததடி. இந்த நல்ல சேதியைச் சொன்ன உனக்கு நான் என்ன பரிசளிப்பது? இந்தா! இந்த நவரத்தின மாலை. நீட்டு! கழுத்தை. இந்த நற்செய்தியை எனக்குச் சொல்லி நீ இவ்வளவு உணர்ச்சியை ஊட்டினது மிகவும் சரி. நான் நீ சிலேடையாகச் சொன்னதை உணராமல் உன் மேல் கோபித்துக் கொண்டேன். அது என் மதியீனம்தான். மன்னிப்பாய்! என் அருமைக் கண்மணி! என் உயிரினும் சிறந்த மாணிக்கமே! பரதனினும் பதினாயிரம் பங்கு மேம்பட்ட, என் ஆசைப் பொக்கிஷம் இராமனுக்கு முடி சூட்டு நடப்பது எனக்கு எத்தனை மகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்க சேதி! மன்னனின் அறிவே அறிவு! நல்ல காரியம் செய்தார்! இராமன் மங்களகரமாக முடி சூட்டப்பெற்று அவன் ஆசை தீரப் பலவாண்டு அரசாளட்டும்! மந்தரே! இம்மகிழ்ச்சியான சேதி கொண்டுவந்த உனக்கு மற்றுமொரு வணக்கம். நீட்டு! கழுத்தை. இந்தா! இந்தா! இந்த மாலையைப் போட்டுக் கொண்டு, முடி சூட்டு விழாவுக்கு நம் வீட்டில் ஆகவேண்டிய காரியங்களையும் அலங்காரங்களையும் செய்! மன்னன் முடி சூட்டை நாளைக்கே வைத்தாரே! அவருடைய குணத்தையும் அன்பையும் யோசனையையும் நான் எப்படி வியப்பேனடி! அரசன் வாழி! இராமன் வாழி! அயோத்தி வாழி! நீயும் நானும் வாழி! போய் வேலையைப் பார்.

**மந்தரை:-** (இரத்தின மாலையைப் பிடுங்கி எறிந்து விட்டு) அய்யோ பைத்தியக்காரி! சூது வாதறியாத பேதைப்பெண்ணே! உனக்கு ஏற்பட்ட கேடு காலத்தின் உச்சம், நெருப்புக்கட்டி சிவப்புப் பனிக்கட்டியாகத் தோன்றுகிறது. அரசன் உன்னிடம் காட்டும் கள்ளத்தனமான அன்பிலும், இராமன் உன்னிடத்தில் நடிக்கும் பொய்யான பக்தியிலும், ஈடுபட்ட நீ அவற்றை மெய்யென்று நம்பி, வெறி கொண்டவள் போல இப்படிப் பேசுகிறாய். இராமன் யார்? பரதன் யார்? இந்த நாடு யாருடையது? இது உன்னுடையதல்லவா? இது யாருக்குக் கிடைக்க வேண்டியது? உன் வயிற்றில் பிறந்த பரதனுக்கல்லவா? இதன் பின் வாரிசுதாரர் யாராய் இருக்கவேண்

ரோஜா முத்தையா

டும்? கேகயமன்னனின் பெண் வாரிசான உன் வயிற்றில் பிறந்த சந்ததிக்கல்லவா? நான் யாவும் அறிந்தவள். ஆனதால் சொல்லுகிறேன், கேள்! முதலாவதாக, இவ்வளவு அவசரமாக இந்தப் பட்டாபிஷேகம் இன்று நினைத்து, நாளைக்கே ஏன் நடக்க வேண்டும்? அதுவும் உன் மகன் பரதன் இல்லாத சமயத்தில் ஏன் நடத்தப்படவேண்டும்? அய்யோ பரிதாபத்துக்குரிய பயித்தியக்காரி! உனக்குக் கூடத் தெரியாமல், உன் 'ஆசைக்கணவன்' சக்கரவர்த்தி முடி சூட்டைப்பற்றி உன்னைக் கலவாமல், உன்னிடம் ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல், பட்டாபிஷேகத்தை இவ்வளவு இரகசியமாகவும் திருட்டுத்தனமாகவும் ஏன் நடத்த வேண்டும்? உன் ஆசைப் பொக்கிஷம் இராமனாவது, தனக்கு நடக்கப்போகும் முடிசூட்டைப்பற்றி ஒரு வார்த்தையாவது உன்னிடம் ஏன் சொல்லக் கூடாது? உன் தகப்பனாருக்குக் கூட, முடி சூட்டுக்கு வரும்படி அழைப்பு அனுப்பவில்லையாம்! உன் மகன் பரதனுக்கும் தெரிவிக்கவே இல்லையாம்! இவற்றையெல்லாம்பற்றி நன்றாய் நிதானமாய் யோசித்துப்பார்! இன்று இராமனுக்குப் பட்டம் போய்விட்டால், பிறகு அவன் வார்சுக்கு அவன் வயிற்றில் பிறந்த பிள்ளைக்குத்தான் பட்டம் போகுமே தவிர உன் மகனுக்கு எப்படி வரும்? நான் சொல்லுவனவற்றைக் கவனமாகக் கேள்! இந்த அரசு உன்னுடையது. வார்சுக் கிரமப்படி இது பரதனுக்குச் சேரவேண்டியது. இந்தக் காரணத்தினாலேயே, அரசர் பரதனை அவன் திருமணம் முடிந்தவுடனே உன் தகப்பன் வீட்டுக்கு கேகயன் நாட்டுக்கு அனுப்பி, இந்தப் பத்து வருஷ காலமாக அவனை இந்தப்பக்கமே வரவொட்டாமல் செய்து, அவனைப் பற்றிக் குடிகளுக்கும் ஒன்றும் தெரியவொட்டாமலும் செய்து விட்டார். இராமனையும் உன்னிடத்தில் அதிக அன்பும் பக்தியும் உள்ளவன் போல் நடிக்கும்படி செய்திருக்கிறார். குடிகளிடத்திலும் இராமனையே அதிகமாக மேல் விழுந்து பழகும்படியும், குடிகளிடம் செல்வாக்குப் பெறும்படியாக நடிக்கும்படியும் ஏற்பாடு செய்திருக்கின்றார். எல்லாவற்றையும்விட ஒரு முக்கிய விஷயத்தைக் கேள்! அதாவது அரசரானவர், மந்திரிகள் குருமார்கள் உள்ள கூட்டத்தில், "பரதன் இங்கு இல்லாத காலமே முடிசூட்டுக்கு ஏற்ற காலம்" என்றும் இராமனிடமும் அரசர் "இராமா! பரதன் இங்கு வருவதற்குள் இந்த முடி சூட்டு நடந்தாக வேண்டும். அவன் வந்தால் பிறகு..........." என்றும் சொல்லியிருக்கிறார். இராமனும் கோசலையும் கொஞ்சிக் குலாவி ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள்! அவள் வீடு பண்டிகை வீடாக இருக்கிறது! இவற்றை எல்லாம்பற்றி ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, நல்ல நடு நிலையான புத்தியோடு சிந்தித்துப்பார்! இவற்றில் இருந்து உன் கணவனிடத்திலும், இராமனிடத்திலும், உள்ள சூழ்ச்சி, வஞ்சகம், துரோகம், முதலிய கெட்ட குணங்கள் உனக்கு விளங்குகிறதா? இல்லையா? பார்? "இராமனென்ன பரதனென்ன இரண்டும் ஒன்றுதானே" என்கிறாயே. அப்படிப்பட்ட இராமன் தனது முடி சூட்டைப்பற்றி ஒரு வார்த்தையாவது உன்னோடு கலந்தானா? சொன்னானா? முடி சூட்டுக்கு ஆக ஊரெல்லாம் அலங்காரம் செய்யும்போது உன் வீதி மாத்திரம் ஏன் விடப்பட்டிருக்கின்றது? இராமனின் தாய் கோசலை வீட்டில், எவ்வளவு ஆடம்பரமாகக் களியாட்டம் நடக்கின்றது? பார்! இராமன் அரசனானவுடன் கோசலைதான் அரசன் தாயாகவும் பெரிய இராணியாகவும் ஆகப் போகின்றாள். சீதையே இனி அயோத்திக்கு இராணியாவாள். சீதையின் தாய், தகப்பன் சுற்றத்தார்களுக்கே இந்த ராஜ்யத்தில் பந்துஜன உரிமையும், ஆதிக்கமும் இருக்கப் போகின்றது. பிரஜைகளும் மற்ற அரசர்களும் இராமனைத்தான் அரசனாக மதித்தும், சீதையைத்தான் இராணியாக மதித்தும், கோசலையைத்தான் அரசன் தாயாக மதித்தும், மரியாதை செய்வார்களே தவிர, உன்னையும் உன் மகனையும் அவன் மனைவிமாரையும் இனி யாரும் சட்டை செய்ய மாட்டார்கள். கோசலையும் இவ்வளவு நாள் உன் மீதிருந்த பொறாமைக்குப் பழிவாங்கித்திருவாள்! உனது இழிவும் துன்பமுமே அவள் ஆனந்தம். தொலைந்தது! இன்றோடு அயோத்தியில் கேகயநாட்டுச் சந்ததியின் பெயரும் சம்பந்தமும், தொலைந்தது! இன்றோடு கைகேயியின் அந்தஸ்து. தொலைந்தது! இன்றோடு பரதனின் எதிர்கால வாழ்வு. நீயும், நானும், பரதனும், பரதனின் மனைவிமாரும் இனி அயோத்தியில் இருந்தால் அனாமதேயப் பேர்வழிகளாகத் தெருவில் திரிய வேண்டியதுதான். அது மாத்திரமா? பரதன் இனிமேல் அயோத்திக்கு வருவானேயானால் அவன் உயிருக்கு ஆபத்துத்தான். புறப்படு! இப்போதே நாம் இருவரும் உன் தகப்பன் வீடுபோய்ச் சேருவோம். பரதனைக் கண்ணிலாவது பார்த்துக்கொண்டிருப்போம். இங்கிருந்து மதிப்பற்று, மானங்கெட்டு எதிரியின் முன் வாழ என்னால் முடியாது. உனக்கும் அது யோக்கியதை அல்ல. அதைவிட உயிரை விட்டுவிடுவதே மேல். நான் சொல்வதை அலட்சியமாகக் கருதாதே!

கைகேயி:- (ஆச்சரியக்குறி புன்சிரிப்புடன், ஆச்சரியக்குறி பயத்துடன், ஆச்சரியக்குறி வீரத்துடன், ஆச்சரியக்குறி மிகுந்த யோசனையுடன் ஒரு பெருமூச்சு; பிறகு மந்தரை தோளில் கை போட்டு அணைத்து, அவள் தலையைத் தடவிக்கொடுத்து) மந்தரை! நீ சொல்லுவது, நான் யோசிக்க யோசிக்க என் புத்திக்குச் சரி என்றுதான் தோன்றுகிறது. ஒன்றைக்கூட மறுக்கமுடியாது. ஆனால் என் மனம் நம்பமாட்டேன் என்கிறது. என்றாலும் அரசர் இதைப்பற்றி என்னிடம் ஏன் சொல்லியிருக்கக்கூடாது? இராமன் அவன் தாயாரிடம் போய்ச் சொல்லிக்கொண்டு, மகிழ்ச்சியடைந்து தன்னை முடிசூட்டுக்குத் தயார்செய்து கொண்டிருப்பவன், அவனிடத்தில் எவ்வளவோ பிரியமாய் இருக்கிற என்னிடம் ஏன் வந்து சொல்லியிருக்கக்கூடாது? அரசன் தானாகட்டும்! பரதனுக்குத் தெரிவித்து அவனை ஏன் முடிசூட்டுவிழாவிற்கு வரவழைத்திருக்கக்கூடாது? என் தகப்பனுக்கு ஏன் அழைப்பு அனுப்பியிருக்கக்கூடாது? அப்படி என்ன பெரிய அவசரம் ஏற்பட்டுவிட்டது? மேலும் முடிசூட்டுக்கு ஊரெல்லாம் அலங்கரித்தவர்கள், என் வீதியையும், என் வீட்டையும் மாத்திரம் ஏன் அலங்கரித்திருக்கக்கூடாது? இவையெல்லாம் எனக்கு மிகுந்த பயத்தை உண்

[தொடர்ச்சி 13ம் பக்கம்]

# இதோ! பெரியாரில் பெரியார்.



## பெற்ற அனுபவத்தைப் பேசுகிறார் தோழர் அழகிரி.

★

13—12—47-ம் நாள் அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற திராவிடர்கழக மாநாட்டில்,தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைத்துப் பேசியதாவது:—

அன்பு மிக்க தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! பெரியார் அவர்கள் படத்தைத் திறந்து வைப்பதென்றால் அது லேசான வேலை அல்ல என்பதான எண்ணங் கொண்டு, அப்படிப்பட்ட கஷ்டமான வேலையை எனக்கு அளிக்க வேண்டுமென்று கருதியே, எனக்குப் பெரியார் அவர்களின் படத்தைத் திறந்து வைக்கும் பணியை, வரவேற்புக் கமிட்டியினர் அளித்திருக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன். அதெப்படிக் கஷ்டமென்று நீங்கள் நினைக்கக் கூடும்.

சாதாரணமாக நாம் சிற்றுண்டிச் சாலையொன்றுக்குச்செல்வோமானால் அங்குள்ள நம் தோழர், இது சூர்யகலா இது சந்திரகலா, இது பாதுஷா,இவை இனிக்கும். இது சவ், சவ், இது கவ், கவ், இவை புளிக்குமென்றால், நமக்கு முன்னாடியே இவை அறிமுகமாகாத பண்டங்களாயிருப்பதால் புளிக்குமோ, தித்திக்குமோ என்று சந்தேகிக்க இடமிருக்கலாம். ஆனால் இது லட்டு, இது ஜிலேபி, இவை கசக்கும் என்று கூறினால் நாம் சும்மா இருப்போமா? "அட்போடா போ, எனக்குத் தெரியும் லட்டு தித்திக்கு மென்று" என உடனே சந்தேகமின்றிப் பதில் கூறி விடுவோம். காரணம் இப் பண்டங்களை நாம் நன்கு அறிந்திருப்பதால். அதே போல் பெரியாரைப்பற்றி நான் நன்றாய்அறிந்தவனானதால், 30-ஆண்டுகளாக நான் நெருங்கி அறிந்திருக்கும் போது அவரைப்பற்றி நானென்ன கஷ்டப்பட்டுக்கூறவேண்டி இருக்கும்? அன்றியும் அவரைப்பற்றி உங்களிடம் பேசுவதென்றால், அது கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாகத்தான் முடியும்.

நவமணிகள் என்று கூறப்படும் மரகதம், மாணிக்கம், வைடூரியம், பச்சை, நீலம், கெம்பு, புஷ்பராகம், கோமேதகம் முதலியவற்றிற்கும், பவளம், முத்து இவைகளுக்கும், அவற்றின் ஒளி, நிறை இவற்றைக்கொண்டு ஓரளவுக்கு மதிப்புக்கூறிவிடலாம். ஆனால் அறிவின் உச்சியையோ, சிந்தனையின் சிகரத்தையோ, பகுத்தறிவின் எல்லையையோ ஒருவனால் அளவிட்டுக் கூற முடியுமா? அதற்கு ஒரு அளவு கோலோ துலாக்கோலோ உண்டா? ஏதாவது மீடர்தான் உண்டா? தோழர்களே சிந்தித்துப்பாருங்கள்! ஆலோசித்துக் கூறுங்கள்! அறிவை அளக்க எங்காவது அறிவுமானி உண்டா? அப்படி இருக்க அறிவின் ஜ்வாலையாகவும், சிந்தனையின் பெட்டகமாகவும், ஆற்றலின் சிகரமாகவும், எல்லை காண முடியாத பகுத்தறிவின் இருப்பிடமாகவும், இருந்துவரும் பெரியாரை நாம் எந்தக்கோல் கொண்டு மதிப்பிட்டுப் பார்ப்பது? வயது ஏற ஏற, அவரது நரை வெளுக்க வெளுக்க, அவரது பகுத்தறியும் திறனும் ஏறிக்கொண்டேதான் போகிறது. கோகலே ஹாலில் ஒரு சாண் நீண்டதென்றால் சேலத்தில் ஒரு முழம் நீளுகிறது. சேலத்தில்தான் ஒரு முழம் என்றால், திருவண்ணாமலையில் ஒரு கெஜம் நீளுகிறது. இப்படியாக இவரது பகுத்தறிவும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டுதான் வருகிறது.

இத்தகைய வொரு பகுத்தறிவின் காரணமாகத்தான், என்னைப்போன்ற அடங்காப்பிடாரிகளும் கூட, அவரை நாடிவரவேண்டியிருக்கிறது. அவரது தெளிந்த பகுத்தறிவுத் தேனின் ருசியை ஏற்கனவே அநுபவித்த காரணமாகத்தான், அந்த ருசியில் மயங்கித்தான், இன்று மதுதேடியலையும் வண்டுகளைப்போல், நாம் இங்கு கூடியுள்ளோம். ஒளி கண்டு மயங்கிக் கிடக்கும் விட்டில் பூச்சிகளைப் போல், நாமும் அவரது கருத்துக்கள் என்னும் பிரசங்கத் தேனை யுண்டு இன்று திளைத்திருக்கிறோம். அவரது பகுத்தறிவு. நுண்ணிய நுண்ணறிவுக்கும் மிக நுண்மையானது. ஆகவேதான் நம்மைப் பிறநாட்டவரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்மைவிட அதிர்ஷ்டசாலிகள் இவ்வுலகில் வேறொரு மக்கள் கூட்டமிருக்க முடியாது என்று கூறத் தோன்றுகிறது. உண்மையாகத் தான் கூறுகிறேன். பொல்லாத கொடிய விரியன் பாம்புகள் நம்மை ஆட்சிபுரிந்து வரும்போது, ஒருபக்கம் இவ்வற்பர்களின் அடக்குமுறைத் தொல்லையும், மற்றொரு பக்கம் அன்பர்களின் பட்டினிக் கூப்பாடும் நம்மை வாட்டி வரும்போது, பெரியாரைப் போன்ற உருவங்கள் நம்மிடையே இருந்து, சற்று ஆறுதல் ஊட்டிவருவதால்தான் நாம் உயிரோடு இந்நாட்டில் வாழ முடிகிறது. இன்றேல் நாம் என்றோ இறந்திருப்போம். அல்லது இந்நாட்டை விட்டேனும் எங்காவது ஓடி விட்டிருப்போம். ஆம். பெரியார் ஒருவர் தான் நம்மை இந்நாட்டோடு இணைத்து வைத்திருக்கிறார். அவரது பகுத்தறிவும் அன்பும் தான், நம்மை அவர்பால் இழுத்து அவர் வழிச் செல்லத் தூண்டுகிறது. அன்னாரையோ அல்லது அன்னாரது இயக்கத்தின் வளர்ச்சியையோ சரிவர அறிந்திருக்க மாட்டார்கள், இந்தப் பதவிவேட்டை உருவாரங்கள். ஆகவே தான் சில சந்தர்ப்பங்களில் அவரை எதிர்த்து விஷமம் செய்து பார்க்கிறார்கள்.

இவர் தமது இயக்கத்தை ஆரம்பித்த காலம் 1925 அல்லது 1926 ஆகஇருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அந்தக் காலத்தில் நம் மாகாண அமைச்சராயிருந்தவர் நமது மதிப்புக்குரிய பனகல் அரசர் ஆவார்கள். அவர் ஒருதலைசிறந்த அறிவாளி. கைதேர்ந்த ராஜதந்திரியும் கூட. அவர் "பொதுப்பணம் ஏராளமாகக் கோயில்களில் வீணாக்கப்படுகிறது; அனைத்தும் பார்ப்பனனின் வாழ்வுக்கே உபயோகப்பட்டு வருவதோடு, நம்மக்கள் வேறு மடையர்களாக்கப்பட்டு வருகிறார்கள்; இதைக் கட்டுப்படுத்தக் கோயில்கள் தம் வரவு செலவு கணக்குகளைச் சாக்காருக்குக் காட்ட வேண்டும்" என்று ஒரு சட்டம் செய்யத் தீர்மானித்தார். அப்படிப்பட்ட ஒரு சட்டம் செய்ய, அவசியம் பொது மக்கள் ஆதரவு வேண்டும். அவருடைய அன்றைய ஜஸ்டிஸ் கட்சியோ, மிட்டாதார், மிராஸ்தார், ஜமீன்தார் இவர்களின் கூட்டமாக இருந்ததால், தன் கட்சித் திட்டத்திற்கு மக்கள் ஆதரவு கிடைப்பது கஷ்டமென்று கண்டு கொண்டார். அத்திட்டத்திற்கு பொது மக்கள் ஆதரவை யாராவது திரட்டிக் கொடுத்தால் நலமாக இருக்குமென்று கருதி, அப்பணியை யாரிடம் ஒப்புவிப்பதென்று யோசிக்கலானார். அவருடைய யோசனைக்குப் பெரியார் ஒருவர் தான் பிடிபட்டார். பெரியாரிடம் வந்து இரண்டு மூன்று நாள் தொடர்ந்து, பெரியார் அவர்களுடன் கலந்து பேசினார். காங்கரஸிலிருந்த போதே வகுப்பு வாரிப் பிரதிநிதித்தத்திற்காகவும், சமுதாயச்சீர்திருத்தத்திற்காகவும் பாடு பட்டு, அதன் காரணமாக அதைவிட்டு வெளியேறி விலகியிருந்த பெரியார் அவர்களும், அவரது வேண்டுகோளுக்கு இணங்கித் தமிழ் நாடெங்கணும் இப்பொல்லாத பிராமணீயத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்யத் துவங்கினார். "சாமிக்கு அரிசி பருப்பு ஏன் படைக்க வேண்டும்? அந்தச் சாமி

சாப்பிடுவதாக எந்த டாக்டராவது சர்டிபிகேட் எழுதிக் கொடுப்பாரா? அப்படியிருக்கச் சாமிக்கென்று கூறிச், சோம்பேறிப் பார்ப்பனர்கள் தானே அதை உண்டு வயிறு வளர்க்கிறார்கள். பாடுபட்டுப் பட்டினி கிடக்கும் நீங்கள் தானே அதற்குப் படி அளந்து வருகிறீர்கள்'' என்கின்ற பல்லவியைத் துவக்கி, ''சாப்பிடட்டும்! தொலைந்து போகிறார்கள். அதற்குக் கணக்காவது காட்டித் தொலைக்கட்டுமே! கணக்கில்லாவிட்டால் அவர்கள் பொதுச் சொத்துக்களை யெல்லாம் நாளாவட்டத்தில் தமது சொந்த சொத்தாக்கிக் கொள்வார்களே! நீங்கள் அழ அழ, அவர்கள் உங்களைக் கொள்ளையடிப்பதா?'' என்பதாக இன்னும் இப்படிப் பல விஷயங்களைக் கிளப்பி ஆங்காங்கு கர்ஜித்து வந்தார். அந்த சமயம் பார்ப்பனர் ''ஜஸ்டிஸ் கட்சி சாமிகள் தலையில் கை வைத்து விட்டது'' என்று விஷமம் செய்து, மக்களை ஜஸ்டிஸ் கட்சி மீது வெறுப்பு அடையச் செய்து இருந்தது என்றாலும் பெரியார், பேச்சைக் கேட்ட பிறகு சட்டம் அவசியம் தான்; கணக்கு வழக்குக் கவனிக்க வேண்டியது தான் என்று கருதிக் கொண்டார்கள். பனகாலரசருக்கும் ஹிந்துமதப் பரிபாலனச் சட்டம்இயற்றுவது சுலபமாகமுடிந்தது.

அந்த ஹிந்து மத எதிர்ப்புப் பிரசாரத்தில் சேர்ந்தவர்கள்தான், நாங்கள் ஏழெட்டுப் பேர்கள். சட்டமியற்றுவதற்கு ஆதரவு தேடித்தந்ததும், பெரியார் அவர்கள் சிந்திக்கலானார். பெரிய தூர திருஷ்டியுடையவர் ஆதலால் யோசித்துப்பார்த்தார். இந்த ''ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களோ பணக்காரர்கள்; பணத்தைக் காப்பாற்ற, தம் பதவியை நீடிக்க எதையும் செய்ய இவர்கள் துணிவார்கள்; இவர்களை நம்பி நம்மால் என்ன செய்யமுடியும்? இவர்களது வேலைமுடிந்ததும் நம்மை இவர்கள் கைவிட்டுவிடுவார்களானால் நாம் என்ன செய்வது; நாம் மக்களிடையே செய்த இவ்வளவு பிரசாரத்தையும் வீணாக்குவதா? கூடாது! கூடாது! தனி இயக்கம் ஒன்று கண்டே தீரவேண்டும், அவ்வியக்கத்திற்கு என்ன பெயர் கொடுப்பது'' என்று சிந்தித்தார். தம் ஆபீஸ் அகராதிகளை யெல்லாம் புரட்டிப் பார்த்தார். அப்போது கண்டெடுத்த வார்த்தைதான் ''சுயமரியாதை'' என்பது. அப்போது தோற்றுவித்ததுதான் சுயமரியாதை இயக்கமும் ஆகும்.

அவ்வியக்கத்தின்மூலம் பிராமணீயத்தைத் தாக்க ஆரம்பித்தோம். அவர்கள் சாஸ்திரத்தை ஆதாரமாகக் காட்டினார்கள். அதை ஆராய்ந்து பார்த்து, அதை ஆரியம் தமக்காக எழுதிவைத்துக்கொண்டதென்றோம்! பாராசரர் வாக்கு, மனு வாக்கு என்று கூற ஆரம்பித்தனர். அவற்றிற்கும் தக்க மறுப்புகள் கூறினோம். புராணங்களையும் உபநிஷத்துக்களையும் காட்ட ஆரம்பித்தார்கள். அவற்றையும் ஆராய்ந்து பார்த்து அவற்றிலுள்ள புரட்டுகளை எடுத்துக்கூற ஆரம்பித்தோம்! முடிவில் கடவுளை ஆதாரமாகக் காட்ட ஆரம்பித்ததும், ''நிறுத்து! தம்பி. அதைப் பற்றி உனக்கும் ஒன்றும் தெரியாது, எமக்கும் ஒன்றும் தெரியாது'' என்று பதில் கூறினோம்! இவற்றை எல்லாம் எங்களுக்குக் கூறித்தந்தவர் பெரியார் தான். சுயமரியாதைத் தத்துவத்தையே நமக்கும் நமது இவ்வுலகத்திற்கும் அளித்தவர் பெரியார்தான். சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்ததும் அவரேதான். அந்தப் பெருமையில் பங்கு கொள்ள வேறு யாருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது.

அவர் நமது சுயமரியாதைத் தத்துவத்தின்மூலம், நமக்கு எதையும் எளிதாக்கித் தந்தார். நமது அறியாமையை அகற்றி நமக்குப் பகுத்தறிவு ஊட்டினார். நமது ஏழ்மையையும் தாழ்மையையும்கூட மறக்கச் செய்தார். ஏழை பணக்காரன் என்பதில்லை, தொழிலாளி முதலாளி என்பதில்லை, அனைவரும் தோழனுக்குத் தோழன் தான் என்ற மனப்பான்மையை ஊட்டினார், அதை வளர்த்தார். ஜமீந்தாரர்களை முரட்டுப் பணக்காரர்கள் என்றார். கடவுளை வெறும் உருளைக் கல் என்றார். பிராமணீயம் அந்தக் கடவுளுக்குத் தூண், அத்தூணைச் சுக்கு நூறாக்கினால்தான் நாம் இன்ப வாழ்வு வாழ முடியும் என்றார். இவற்றைக்கூற அவர் ஒரு சிறிதும் அஞ்சினாரில்லை. யாரோ ஒரு அன்பர் சற்று முன் அஞ்சாநெஞ்சம் படைத்த அழகிரிசாமி என்று என்னைப் பாராட்டினார். எனக்கு அஞ்சா நெஞ்சத்தை அளித்தவர் பெரியார்தான். அவர் எனது அறிவிலிட்ட வித்துத்தான் என்னை அஞ்சா நெஞ்சமுடையவனாக்கியது. அவரது அஞ்சா நெஞ்சத்துக்கு ஒரு சான்று கூறுகிறேன் கேளுங்கள்.

ஒருசமயம் விருதுநகரில் கூடிய ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் பெரியார் அவர்கள் ஆரியத்தையும், ஆரியத்தின் சிஷ்யகோடிகளையும் மிகக் கடினமாகத் தாக்கிப் பேசிக் கொண்டிருந்தார். நானும் அவர் அருகில் மேடைமீதிருந்தேன். பெரியாரின் பேச்சைக்கேட்டு ஆத்திரமடைந்த தோழர் ஒருவர், கனல் கக்கும் கண்களோடு தம் கத்தியை உருவிக்கொண்டு பெரியாரைக் குத்திவிட ஓடோடியும் வந்தார். வந்தவரைக் கண்டு அஞ்சி ஆடாமல், அவரது கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார் பெரியார். அவரை ஒரு நாற்காலியில் அமர்த்தி ஆத்திரம் அடங்கச்செய்தார். அதன் பின் என்ன செய்தார்? அவரைப் போலீஸிடம் ஒப்புவித்தாரா? அதுதான் இல்லை. அவரை வெளியில் விட்டால் கூட்டம் அவரைக் கொன்றுவிடும் என்பதைப் பெரியார் அறிவார். ஆகவே அவரைத் தக்க பாதுகாப்போடு வீட்டுக்கு அனுப்பி வைத்தார். அவ்வளவு பெருந்தன்மை படைத்திருப்பதால்தான் அவரைப் பெரியார் என்று நாம் அழைக்கிறோம்.

கடவுளென்றால் அதெல்லாம் ''வெறும் புருடா'' என்று கூறினார். ''மதம் மடமையின் விருந்தென்று'' புகன்றார். ''புராணம் ஒரு ஏமாற்று வித்தை'' என்றார். ''பிராமணீயம் ஒரு படுமோசப் பாதகம்'' என்றார். ''சாஸ்திரங்களைக் குப்பை'' என்று குறித்தார். அப்படி எதைக் கண்டு நாமெல்லாம் அஞ்சினோமோ, எதற்கு நாமெல்லாம் அடிபணிந்திருந்தோமோ, எதை நம்மவர்கள் சிலர் பெருமை என்றுகூட நினைத்து வந்தார்களோ, அவற்றை யெல்லாம் அறிவு கொண்டு விளக்கி நமது வாழ்க்கையை ரொம்ப லகுவாக்கினார். நமது துன்பங்களை யெல்லாம்கூட மறக்கச் செய்தார்.

படித்தவர்—படியாதவர்கள், ஜமீன்தாரர்கள்—குடியானவர்கள், உத்தியோகஸ்தர்கள்—குமஸ்தாக்கள், பணக்காரர்கள்—ஏழைகள் ஆகிய சகலரையும் நமது கண்களுக்கு ஒரே மட்டமாக்கினார். எம். பி. பி. எஸ். டாக்டரையும் நமது அம்பஷ்ட வைத்தியரையும் அவர்களது படிப்பைக் கொண்டல்ல, அவர்களது அநுபவத்தைக் கொண்டு, அவர்களது அறிவின் நுட்பத்தைக் கொண்டு, அவர்களின் செயலாற்றுந் திறனைக் கொண்டு கணக்கிடும்படி செய்தவர் அவர்தான். ''எப்படி ஒரு பெரிய ரோட்டு உருளையானது ரோட்டில் பரப்பப்பட்டுள்ள சிறுகல், பெருங்கல் அனைத்தையும் தன் பளுவால் சரி மட்டமாக்குகிறதோ, அப்படித் தம் அறிவுருளையால் அனைத்தையும் சமமாக்கித்தந்தார் நமது அறிவின் தந்தை பெரியார். முகத்து ரோமத்தை நீக்க உதவுவது கூரிய கத்தி. அதைக் கூர்மைப்படுத்தித் தருவது சாணைக்கல். அதே போல் பகுத்தறிவுதான் நமது மடமையைப் போக்கும் கத்தி. அப்பகுத்தறிவுக்குச் சாணைக்கல் போல் உதவி செய்வதுதான் நமது கல்வி. ஆகவே கல்வியைக் கல்லடா தம்பி! அது அறிவைக் கூர்மைப்படுத்தும் தம்பி! என்று நமக்குக் கூறினார். நெடுங்காலமாகவே நாம் நமது அறிவை உபயோகப்படுத்தாததால், அது மழுங்கி விட்டது. ஆதலால் அதைக் கல்வி யென்னும் சாணைக்கல்லால் தீட்டடா தம்பி! என்று கூறியவர் அவர்தான்.

படித்தவர் என்றால் ஒன்றும் பிரமாதம் இல்லை. படித்து விட்டதால் மட்டும் ஒருவன் அறிவாளியாகிவிட மாட்டான். அறிவாளிகளெல்லாம் படித்துத்தான் அறிவாளிகள் ஆனார்கள் என்று கூறுவதற்கும் இல்லை. அல்லது படித்திருப்பதினாலேயே ஒருவன் சகல காரியங்களிலும் நிபுணன் ஆகிவிட முடியாது. நன்றாகப் படித்

ரோஜா முத்தையா

துள்ள் ஒரு நீதிபதி, ஒரு நல்ல நாற்காலி மேஜையைச் செய்துவிட முடியாது. அது தச்சன் தொழில். ஆகவே அவன்தான் அதைத் திறம்படச் செய்வான். அந்த நாற்காலி செய்ய முடியாததால், அந்த நீதிபதியை அறிவற்றவன் என்று நாம் கூறிவிட முடியுமா? அந்தத் தச்சனையே நாம் ஒரு உளியடித்துக் கொடு என்றால், அதைத் திறம்பட அவனால் செய்துதர முடியுமா? உளி செய்பவன் கருமான். அவனுக்குத்தான் உளி செய்யும் பக்குவம் தெரியும். ஆகவே அவனவனுக்கு அந்தந்தத் தொழிலில் தேர்ச்சியுண்டு என்று கூறலாமே தவிர, ஒருவன் மற்றவனைவிட அறிவில் உயர்ந்தவன் என்றோ, தாழ்ந்தவன் என்றோ நம்மால் கூற முடியாது. வேண்டுமானால் கவனித்துப் பாருங்கள்.

நமது எத்திராஜும் வக்கீல் படிப்புப் படித்தவர்தான். நமது வெங்கடரத்தினமும் வக்கீல்படிப்புப் படித்தவர்தான். ஆனால் அவர் நாளொன்றுக்கு ரூ. 2000, 3000 வாங்குகிறார். இவர் ஒரு பெட்டிஷனுக்கு ரூ. 0-3-0 பீசுக்குக் கோர்ட்டில் லாட்டரி அடிக்கிறாரே. படிப்புத்தான் அறிவானால், இவரிருவரும் சரிவிகிதத்திலன்றோ பணம் சம்பாதிக்க வேண்டும். இல்லையானால் அவர்களின் படிப்பல்ல, அறிவுதான் மூலகாரணம் என்பதை அறியமுடிகிறதா? இல்லையா? இப்படி எல்லாம் விளக்கிக் கூறிப், பகுத்தறிவுதான் உலகை ஆளும் என்று காட்டி நமக்கு வாழ்வளித்தவர் பெரியார்தான்.

செழுமையில் ஆசைப்படாதே! உன்னுடைய தேவையை அநாவஸ்யமாக அதிகரித்துக்கொள்ளாதே! மற்றவர்களின் ஆடம்பரத்தைக் கண்டு அவ்வாடம்பரத்தில் மோகம் கொள்ளாதே! இன்று வெறும் ஆசைக்கென்று விரும்பப்படும் பொருளானது, நாளைக்கு அடையமுடியாமற் போனால் நமக்குத் துன்பத்தையே விளைவிக்கும்! ஆனதால் அவசியமில்லாத பொருளைத் தேவையென்று கருதிவிடாதே! எளிய வாழ்க்கை நடத்து! ஏமாந்துபோகாதே! என்று எச்சரிக்கை செய்து நம் வறுமையை மறக்க வழிசெய்து தந்தவரும் பெரியார்தான்.

அவரது பொருளாதாரச் சிக்கனமும் சற்று அலாதியானதுதான். முழுக்கைச் சட்டையில் மோகம் கொள்ளாதே! நாலு முழுக்கைச் சட்டைகளுக்கு வேண்டிய துணியில், 5 அரைக்கைச் சட்டைகள் தைத்துக் கொள்ளலாமே! வேலை செய்யவும் சவுகரியமாகயிருக்குமே! என்று கூறிச் சட்டை தைத்துக் கொள்வதில் கூடச் சிக்கனத்தை அனுஷ்டிக்கும்படி செய்வார். அதனால்தான் அவர் எப்போதும் அரைக்கைச்சட்டைகளை அணிந்து வருகிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

அவரது சிக்கனத்துக்கு மற்றோர் உதாரணம் கூறுகிறேன். கவனித்துக் கேளுங்கள். அவர் ஒரு சமயம் கும்பகோணம் சென்றிருந்தபோது தோழர் சின்னத்தம்பி வீட்டிற்கு விருந்துண்ணச் சென்றிருந்தாராம். அவர் வீட்டில் ஒரு ரேடியோ இருக்கக் கண்டு இதை என்ன விலைக்கு வாங்கினீர்கள் என்று கேட்டாராம். அவர் ரூபாய் எண்ணூறுக்கு வாங்கியதாகச் சொன்னாராம். அதைக் கேட்டதும் அவர் பார்த்தீங்களா, இந்தத் திருட்டுப் பசங்க செய்கிற வேலையை! இந்த ரேடியோவுக்கு இவ்வளவு பளபளப்பான பெட்டி ஏன்? சாதாரண நம் நாட்டுக் கள்ளிப் பலகையில் இந்தப் பெட்டியைச் செய்தால், இன்னும் 200 ரூபாய் குறைய விற்கலாமே! இந்தப் பளபளப்புக்காக நாமும் 200, 300 அதிகம் தரவேண்டியிருக்காதே! விலை சாசமாயிருந்தால் இன்னும் அதிகம் பேர் கூட, வாங்கச்சவுகரியமாகஇருக்குமே! என்று கூறினாராம்.

இப்படி எதற்கெடுத்தாலும் சிக்கனம் தான். ஆம் மண்ணும் விண்ணும் கூட இவருக்குச் சிக்கனம் செய்யப்பட வேண்டியவைதான். காரணமின்றி அவர் நமக்குச் சிக்கனம் போதிக்கவில்லை. சிக்கனம்அனைவருக்கும்அவசியமானது. அதுவும் நம்மைப்போன்ற ஊதாரி மக்களுக்குச் சிக்கனக் கருத்து மகா மகா அவசியமானது. எதையும் வேஸ்ட் செய்வதுதான், வீண் செய்வதுதான் நமது பழக்கம். பாருங்கள்! இந்த மேஜைமீது குவிந்து கிடக்கும் இம் மலர்மாலைகளால் யாருக்கு என்ன லாபம்? இம்மாதிரி எத்தனைமாலைகள் அன்றாடம் பாழாகின்றன? நம் நாட்டில், மாலை அணிவித்தல் என்ற அர்த்தமற்றசடங்கால், தினம்எத்தனை ஆயிரம் ரூபாய்கள் பாழாகின்றன என்பதை நீங்கள் அறிவீர்களா? இதற்காக எத்தனை பேருடைய உழைப்பு, எத்தனை ஏகர் பூமிகள்,வீணாக்கப்படுகின்றன என்பதுபற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா?

அடுத்த அதிசய மென்னவென்றால், வேறெந்த நாட்டிலும் இல்லாத வாழை இலையிலுண்பதென்ற பழக்கம் நம் நாட்டில் இருந்து வருகிறது. கோப்பையில் சாப்பிடுவது அநாசாரம். வாழை இலையில் உண்பது நமக்குப் பெருமை. இப்பெருமைக்காக லட்சக் கணக்கான ரூபாய் பெறுமான இலைகள், அன்றாடம் வீதியில் எறியப்பட்டு வீதியை அசிங்கப்படுத்திவர வேண்டியதா? பகுத்தறிவு கொண்டு சிந்திக்க வேண்டாமா நீங்கள்? வாழைத் தோட்டங்கள் இல்லையானால், அவ்விடங்களில் எவ்வளவு அவசியமான உணவுப்பொருள்கள் பயிரிடக்கூடும்! வாழைக்காயென்ன அத்யாவசியப் பொருளா? வாழையிலை அறுப்பதால், வாழைக்காய் அதிகம் காய்க்கப்படுவதில்லை, ஆகவே இலைக்கென்று தனித்தோட்டங்கள் சிலர் வைத்து வருகிறார்கள். வாழையுற்பத்தி குறைக்கப்பட வேண்டும். மலர்கள் உற்பத்தியும் குறைக்கப்படவேண்டும். மக்களும் வாழையிலையில் உண்ணும் பழக்கத்தைக் கைவிட்டுத் தட்டுகளில் உண்ணல் வேண்டும். மலர் மாலை அணிவித்தலை விட்டுத் துணி மாலையாவது நூல் மாலையாவது அணிவித்தல் வேண்டும். மற்றவர்கள் செய்யாவிட்டாலும் பகுத்தறிவுப்பாதை வழிச் செல்லும் நாமாவது, நாசகரமான இப்பழக்கங்களைக் கைவிடல் வேண்டுவது முக்கியம். இவற்றை யெல்லாம்கூட நமக்கு விளக்கிக்காட்டியவர் பெரியார் தான்.

இதை நான் கூறாவிட்டாலும் நமது சரித்திர ஆசிரியர்கள் கூறுவார்கள், நமது தற்கால ஆசிரியர்கள் கூறாவிட்டாலும் பிற்கால ஆசிரியர்களாவது, இந்நாட்டில் பகுத்தறிவொளியை வீசியவர் பெரியார் என்பதை மறக்காமல் பொறிப்பார்கள். அவர்கள் பொறிக்க மறந்து விடுவார்களானால், அவர்களைச் சரித்திர ஆசிரியர்கள் என்று உலகம் மதிக்காது.

இவரைப் பெரியார் ஈ. வெ. ராமசாமி என்று நமது மக்கள் சாதாரணமாக அழைக்கின்றார்கள் என்றாலும், என்னைப் பொறுத்தவரையில் எனக்குப் பெரியார் வேறு, ஈ. வெ. ராமசாமி வேறுதான். ஈ. வெ. ராவுக்கு மாடமாளிகைகள் உண்டு. 100க்கணக்கான வீடுகளும், 100க்கணக்கான ஏகர் நஞ்சை புஞ்சைகளும் உண்டு. ஓரளவு ரொக்க ரூபாயும் பாங்கியில் உண்டு. ஆனால் பெரியாருக்கு அதெல்லாம் இல்லை. அவருக்கு உலகெல்லாம் சொந்த ஊர்தான். உலக மக்களெல்லாம் அவருக்குச்சகோதர சகோதரிகள் தான்.

நம் நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் எத்தனையோ பணக்காரர்கள் உண்டு. அவர்களில் சிலர் தனக்குப் பணமிருக்கிறது என்று மற்றவர் பாராட்டவேண்டுமென்பதற்காகப் பணம் சம்பாதிப்பார்கள். சிலர் பண மூட்டைகளை அடுக்கி அழகு பார்ப்பதற்காகச் சம்பாதிப்பார்கள். இன்னும் சிலர் தமது வாழ்வை ஆடம்பரமாக நடத்தவேண்டும் என்பதற்காகப் பணம் சம்பாதிப்பார்கள். ஆனால் எந்தப் பணக்காரனும், அவன் எந்நாட்டவனாயினும் சரியே, அவன் தன் சுயநலத்திற்காக, சுய பெருமைக்காகப் பொது வாழ்வில் ஈடுபடுவானே அல்லாது, தன்னலமற்று எவனும் பொதுவாழ்வில் ஈடுபடமாட்டான். ஆயுள் முடிந்து ஓய்வு பெறவேண்டிய காலத்தில் கூட, தான் சம்பாதித்த பொருளின் முழுப் பயனையும் அடைய முயற்சிப்பானே அல்லாது, தன் எஞ்சிய காலத்தைப் பொதுவாழ்வுக்குக்

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

காக்க! பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின் ஊங்கில்லை உயிர்க்கு.
—திருவள்ளுவர்.

குடி அரசு

3—1—48 சனிக்கிழமை.

# எல்லா இந்திய மாதர் மாநாடு.

இந்த வார ஆரம்பத்தில், சென்னையில் எல்லா இந்திய மாதர் மாநாடு என்கிற பெயரால், சில வெளி நாட்டுப் பெண்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட மாநாடு பெரிய விளம்பரத்தோடு, நடந்து முடிந்திருக்கிறது. ஷ மாநாட்டில் கலந்துகொண்ட பெண்கள், பெரும்பாலும் உடல்கஷ்டமே இன்னதென்றறியாத பணக்காரப் பெண்களும், பார்ப்பனப் (புரோகிதப் புத்தி படைத்த) பெண்களுமாகவே ஆவார்கள் எனவும், பாடுபடும் பாட்டாளி மக்களின் பிரதிநிதியாக—குறிப்பாக திராவிடப் பெண்களின் பிரதிநிதியாக ஒருவரும் இல்லை எனவும் மாநாட்டு நடவடிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

பெண்கள் உயர்வோ, முன்னேற்றமோ, விடுதலையோ அடையவேண்டுமானால் பெண்கள்தான் அதற்குப்பாடுபட முன்வரவேண்டுமென்று கூறி, சுயமரியாதைப் பெண்கள் மாநாடு பலவற்றைக் கூடச் செய்து வந்திருக்கின்றோமாதலாலும், பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சுயமரியாதைப் பெண்கள் பல நல்ல திட்டங்களை வகுத்து, அவைகள் செயலுக்கு வரவேண்டுமென்று தீர்மானங்கள் செய்து நம்மியக்கத்தின் சார்பில் விளக்கி வந்திருக்கிறார்களாதலாலும், சமுதாயச் சீர்திருத்தத்திற்குப் பெண்களின் அடிமை வாழ்வு அகலுவதே சிறந்த மார்க்கம் என்று கூறிப் பெண்களின் கோரிக்கைகளை ஆதரித்து வந்திருக்கின்றோமாதலாலும், இந்த மாநாட்டையொட்டி நமது அபிப்பிராயத்தை விளக்கவேண்டுமென நாம் ஆசைப்படுகின்றோம்.

இம்மாநாட்டிற்கு வரவேற்புக் கழகத் தலைவியாக இருந்தவர், தோழியர் அம்புஜம்மாள் என்பவர், பார்ப்பன இனத்தைச் சேர்ந்தவர். மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவர் தோழியர் அனுசூயாபாய் காலே என்பவர் மத்திய மாகாணச் சட்டசபையின் உபதலைவர். ஒரு வடநாட்டார். இந்த மாநாட்டிற்கெனச்சிறப்பாக அழைக்கப்பட்டு வந்திருந்தவர் தோழியர் ராஜகுமாரி அமிர்த கவுரி என்பவர். மத்திய அரசாங்கச் சுகாதார மந்திரி, டெல்லிவாசி.

இவர்களுள் வரவேற்புத் தலைவரான தோழியர் அம்புஜம்மாள் அவர்கள் தன்னுடைய வரவேற்புரையில், மாநாட்டுச் சம்பிரதாய முறையில் சில வற்றைச் சொல்லிவிட்டு, "பழைய ஆரிய—திராவிட வேற்றுமைகளை இன்னும் மனோபாவத்திலே கண்டு வகுப்புப் பிணக்குகளை வளர்த்துவிடவும், ஆஸ்திக—நாஸ்திகப் பூசல்களை மூட்டிவிடவும்,...... சிலர் முயற்சி செய்கிறார்கள் அல்லவா? இந்த இடையூறுகளைத்தாண்டி ஒற்றுமைக்கு உழைப்பது நம் தனிப் பெரும் கடமையாகும்" எனவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

திராவிட உணர்ச்சி நிரம்பிய நாட்டில், அந்த உணர்ச்சி செயலுக்கு வருவதற்குமுன்னால், அந்த நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரு ஆரியப் பெண்ணின் மனநிலை—வாய்ப்பேச்சு — செயலாற்றும் திட்டம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு இது ஒரு நல்ல சாட்சியாகும் என்று மட்டும் இதை எடுத்துக் காட்டுகின்றோம். ஆரிய—திராவிட வேற்றுமைக்கு ஆளாகித் தாழ்வடைந்து, அடிமையாகிப் பலியாகி வருவது திராவிடர்களே எனவும் அந்த வேற்றுமையை இன்றைக்கும் வளர்த்து வருவதினால் வாழ்க்கையில் உயர்வடைந்து, ஆளுபவர்களாகி, பலிகொண்டு பெரிய இன்பத்தை அநுபவித்து வருகின்றவர்கள் ஆரியப் பார்ப்பனர்களே எனவும், ஆரியர்கள் தங்கள் நிலை தாழ்வடையாமல் இருப்பதற்கு ஆஸ்திகக்கூச்சலை அர்த்தமில்லாமல் கிளப்பிவருகின்றார்கள் எனவும், அதுவும் ஆகஸ்டு பதினைந்திற்குப் பிறகு அந்தக் கூச்சலும் செயலும் அளவு கடந்து பெருகியிருக்கின்றதெனவும், ஆஸ்திகம் என்கின்ற மாய வலைதான் பல மதிப்பு வாய்ந்த திராவிடப் பெரியோர்களை, கை கால்களைக்கூட அசைக்க முடியாமல் கட்டியிருக்கிறதெனவும், வெளியில் எடுத்துக் கூறி வாழ்க்கையில் அனுபவித்து வருகின்ற திராவிடர்களாகிய நாம், அம்மையாரின் இக்கடமைக்குக் குறுக்கே நிற்கப் போவதில்லை. ஆரிய - திராவிட ஒற்றுமைக்காக இரவும் பகலும் உழைப்பதற்குத் தன்னைப் போல மற்றும் பலரைச் சேர்த்துக் கொண்டு அம்மையார் முன்வரட்டும்! அவ்வாறு உழைப்பதினாலாவது ஆரிய - திராவிட வேற்றுமையைப் போக்கி, மனிதர் மனிதர் என்ற நிலையில் வாழ வழி செய்யட்டும்! பிணக்கையோ, பேதத்தையோ உண்டாக்கினதோ, வளர்த்து வருவதோ நாம் இல்லை எனவும், ஆரியப் பார்ப்பனர்களே அதை உண்டாக்கி வளர்த்து வருகின்றார்கள் எனவும் நமது இத்தோழியர் அறிந்து கொள்ளட்டும்! என்றும் கூட அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

மாநாட்டிற்கு விசேஷமாக அழைக்கப்பட்டிருந்த தோழியர் அமிர்த கவுரி அவர்களோ, இன்று நாட்டிற்குத் தேவையான ஒன்றைக் கூடக் கூறவில்லை என்பது மட்டுமல்ல, வடநாட்டு மனப்பான்மையில் ஊறி வளர்ந்த போக்கில், திராவிடப் பெண்கள் கூட அல்ல, ஒழுங்கான எந்தப் பெண்ணுமே பின்பற்ற முடியாத போக்கில் ஒரு கருத்தையும் குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்பதை, நம்மால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

"மனோதிடமும் ஆத்ம சக்தியுமே ராவணனை எதிர்க்கச் சீதாதேவிக்கு ஆயுதங்களாக விளங்கியன. அந்த ஆயுதங்களையே இந்திய மாதர் கைக்கொள்ள வேண்டும். ராணுவப் பயிற்சி, ஆயுதபலம் என்றெல்லாம் பெண்கள் யோசிக்க வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறார். அதாவது சீதா தேவியைப் போலப் பெண்கள் இருக்க வேண்டும் என்று

குறிப்பிடுகின்றார். இந்த அநாகரீக மான ஆபாசமான உபதேசத்தைப் பெண்ணுலகுக்கு வழங்க, இவர் இவ்வளவு தூரம் பறந்து வந்திருக்க வேண்டியதில்லை என்றுதான் ஒழுங்கான யோக்கியதையுடைய பெண்கள் நினைக்க முடியும் என்பதே நமது கருத்தாகும்.

மாநாட்டிற்குத் தலைவியான தோழியர் அனுசூயாபாய் அவர்களோ சில நல்ல கருத்துகளை—பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே சுயமரியாதைப் பெண்கள் மாநாடுகளில் தீர்மானம் செய்து நம் நாட்டில் விளக்கிக் கூறி வந்த கருத்துகளை, - தலைமையுரையில் கூறியிருக்கின்றார். அவர் முக்கியமாகக் குறிப்பிட்ட விஷயங்கள் 1 பெண் கல்வியைப் பெருக்க வேண்டியது. 2 பெண்களுக்குத் தேகப் பயிற்சியைக் கட்டாயமாக்க வேண்டியது: 3 மக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டியது. 4 சமூக விவகாரங்களைக் கவனிக்க அரசாங்கத்தில் பெண் மந்திரி யொருவரை நியமிக்க வேண்டியது என்பன என்று குறிப்பிடலாம்.

மாநாட்டுத் தலைவர், மாநாட்டில் வற்புறுத்திக்கூறிய இப்பிரச்னைகள் மாநாட்டில் எந்த அளவு கவனிக்கப்பட்டன? மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில், இவை ஏன் இடம்பெறவில்லை? மாநாட்டுத் தலைவர் அவற்றை ஏன் வற்புறுத்தவில்லை? என்பதை எண்ணும் போதுதான், "எல்லா இந்திய பணக்காரப் பார்ப்பனப் பெண்கள் மாநாடு" என்று இம்மாநாட்டை முதலில் குறிப்பிடவேண்டியதாயிற்று.

மாநாட்டுத் தீர்மானங்களிலேயே, தலைவருடைய கருத்துகள் இடம் பெறவில்லையானால், அக் கருத்துகளுக்கு அரசாங்கம் எவ்வளவு தூரம் செவிசாய்க்கும்? அதுவும் ராமராஜ்ஜியம் என்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

சுதந்தரம், விடுதலை என்பனைதப் பற்றி நாம் சொல்லும்போதெல்லாம், ஒரு நாடு சுதந்தரம் பெற்றதென்றால், அந்த நாட்டிலுள்ள பெண்கள் சுதந்தரம் பெற்றவர்கள் என்று சொல்லக் கூடிய நிலையிருந்தால் தான், அதாவது சமுதாயத்திலே சுதந்தர நிலை காணப்பட்டால் தான், சுதந்தரம் பெற்ற நாடு, விடுதலையடைந்த சுயேச்சையான நாடு என்று சொல்லலாம் என விளக்கி வந்திருக்கிறோம். அதனாலேயே "மாதர் மாநாடு" என்ற பெயரால் கூடிய இக் கூட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு இன்று விளக்கவேண்டும் என எண்ணினோம்.

## பெரியார்.

★

பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் கீழ்வரும் நாட்களில் குறிப்பிட்டவாறு சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

| | |
|---|---|
| 4—1—48. | சேலம். |
| 5—1—48. | ஏற்காடு. |
| 6—1—48. | ஜெயங்கொண்டம். |
| 7—1—48. | பந்தணைநல்லூர். |
| 8—1—48. | பெரம்பூர் [மாயவரம்] |
| 9—1—48. | குறிச்சி. [நாகை] |
| 10—1—48. | ஆழியூர். [திருவாரூர்] |

இனி மந்தர் மாநாட்டுத் தலைவர் கூறிய அபிப்பிராயங்களை, நம் திராவிட நாட்டுப் பெண்கள் நிலையோடு பொருத்தி, நமது கருத்தை விளக்குவோம்.

1. பெண் கல்வி. திராவிடப் பெண்களைப் பொறுத்தவரையிலும், நூற்றுக்கு ஒருவரோ, ஒன்றையே அரைக்கால் பேரோதான் கல்வி கற்றவர்களாயிருக்கின்றார்கள் என்பதைப் புள்ளி விபரம் காட்டும் சர்க்கார், பெண் கல்விக்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது? பெண் கல்வியைப்பெருக்க என்ன திட்டம்தான் வைத்திருக்கிறது? முதலாவது, திட்டம் வகுக்கும் உரிமை கூட எங்களிடத்தில் இல்லையே என்று கையை விரிக்கும், திராவிட மந்திரிகளைப் பெற்றிருக்கும் நாம், அவர்களிடமிருந்து தான் இதை எதிர் பார்ப்பதற்கு நமக்கு யோக்கியதையுண்டா? ஆனால் பெண்கள் விடுதலைக்கு—சமுதாய விடுதலைக்கு உண்மையான நாட்டின் விடுதலைக்குப்—பெண் கல்வி அவசியம் என்பதை நாம் வற்புறுத்திக் கூறிவந்திருப்பதைப் போலவே இப்பொழுதும் வற்புறுத்திக் கூறுகின்றோம்.

"5, 6 வயதுகளிலேயே, அழகழகாகக் கோலம் போடக் கற்றுக் கொள்ளும் நம் சிறுமிகள், அரசாங்கம் வற்புறுத்துமேயானால், ஆறு மாதத்திற்குள்ளாகவே எழுதப் படிக்கத் தெரிந்துகொள்வார்களே! அப்படிக் குழந்தைகள் கற்றுக்கொள்ளவில்லை என்றால் அவைகளின் பெற்றோருக்குப் போடு ஆறு மாதம் ஜெயில்! அவைகள் கற்றுக் கொள்கின்றனவா? இல்லையா? பார்ப்போம்! ரோஷமிருந்தால் செய்வாயா?" என்று பெரியார் அவர்கள் கேட்பதைப்போல நாமும் சர்க்காரைக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை.

2. பெண்களின் தேகப்பயிற்சி. நாள் முழுதும் பாடுபடும் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த நம் திராவிடப் பெண்களுக்கு—உழைப்பையே வாழ்வாகக் கொண்டு உடல் கருகிய இவர்களுக்கு—தனியாகத் தேகப் பயிற்சி என்பது வேண்டியதில்லை என்று கூறத்தக்கதாயினும், நடுத்தரப்பெண்கள் சிலரைப் பொறுத்த அளவில் பெண்களுக்கு உடற் பயிற்சி அவசியம் அளித்துவர வேண்டுமென்றே இதுவரை நாம் வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

ஆனால் ஆண்களுக்குக்கூட யோகப் பயிற்சியே வேண்டும் என்று கூறி, அதை முக்கிய அம்சமாக வகுக்கவேண்டுமென்று வற்புறுத்தி வரும், அனுமார் தாசராகிய நம்கல்விமந்திரியின் ஆட்சியில், பெண்கள் தேகப்பயிற்சி எந்த அளவு கவனிக்கப்படும்? நம் நாட்டுப் பெண்களைச் சீதைகளாக ஆகுங்கள் என்று நம் கல்வி மந்திரி திருவாய் மலர்ந்தருளாதவரையும், நம்நாட்டுப் பெண்கள் அதை யொரு பாக்கியமாகவே கருத வேண்டும் எனக் கருதுகின்றோம்.

3. மக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தல். இதை மாநாட்டுத் தலைவர் கூறியதென, 29-12-47ம் நாள் சு. மி. எழுதியிருப்பதை அவ்வாறே இங்கு தருகின்றோம்.

"சர்க்கார் சமாளிக்கவேண்டிய மற்றொரு பெரும் பிரச்னை இருக்கிறது. அமிதமான ஜனப் பெருக்கமே அப்பிரச்னை. இப் பெரு நோக்கத்தைச் செயற்கையான முறைகளால் தடுக்காவிட்டால், நாட்டின் பொருளாதாரம் குலைந்துவிடும் என்று ஸ்ரீ எம். விஸ்வேஸ்வரய்யா எச்சரித்திருக்கிறார். தானிய உற்பத்தி அநேகமாக ஒரே அளவில் இருக்கிறது. ஜன சங்கியை மட்டில் அதிகரித்திருக்கிறது. இன்னும் சிறிது காலத்துக்கு "அதிக உணவு உற்பத்தி செய்" பிரசாரத்தினால் கணிசமான பலன் ஏற்படாது. வெளி

நாட்டிலிருந்து உணவு தருவித்துக் கொண்டிருந்தால், வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை வசதி குறைந்து நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு ஹானி ஏற்படும். ஆகவே தானிய உற்பத்திக்கும் ஜனசங்கியைக்கும் உள்ள விகிதாச் சாரத்தைநிலைநிறுத்த, பிரஜா உற்பத்தியைக் கட்டுப்படுத்தவேண்டும்' இதை மற்றொருமுறை தோழர்கள் படித்துப் பார்த்தல் வேண்டும்.

மக்கள் உற்பத்தியைக் கட்டுப்படுத்தல், செய்கைமுறையால் தடுத்தல் என்ற சொற்களால்தான் குறிப்பிடுகின்றார் என்பதும், கர்ப்பத்தடை என்ற சொல்லே காணப்படவில்லை என்பதும், அதைக் கூறுவதற்கே அம்மையார் பின் வாங்குகின்றார் என்பதும் நன்கு தெளிவாகும். மேலும் மக்கள் உற்பத்தியைக், கட்டுப்படுத்தல் என்பது, இன்னொரு ஆண் ஒருவரின் கருத்தென்று கூறி, அதுவும் உணவு உற்பத்தி குறைவாயிருப்பதால் மக்கள் உற்பத்தியைக் குறைவுபடுத்தவேண்டுமென்கிற அளவில்தான், இப்பிரச்னையை விளக்குகிறார் என்பதும் தெரிய வரும். அதாவது இப்பிரச்னையை அம்மையார் கூறும்போதே, மிகுந்த பயத்தோடு வலுவில்லாத முறையிலேயே கூறியிருக்கிறார்.

கர்ப்பத்தடையைக் குறித்துத் திராவிடப் பெண்கள் மாநாடுகளில் வற்புறுத்தித் தீர்மானங்கள் செய்ய, அதற்காகப் புத்தகங்களும் வெளியிட்டு, நமது கருத்தையும் அப்போதைக்கப்போது வெளிப்படுத்தி வந்திருக்கின்றோமாதலால் இப்பிரச்னையை இங்கு விளக்குகின்றோம்.

முதலாவது கர்ப்பத்தடை வேண்டுமா? வேண்டாமா? என்பதே பெண்களைப் பொறுத்த விஷயம் என்பது நமது கருத்து. "அழுதழுதும் பிள்ளை அவள் தானே பெறவேண்டும்" என்று சொல்லப்படுவதைப் போலப் பிரசவத்தால் துன்பம் அடைகின்றவர்கள் பெண்களே யாதலால், ஆண்கள் அத்துன்பத்தை உணர்ந்தவர்கள்போல நடிக்கலாமே தவிர உணர்ந்துகொள்ளவே முடியாது என்பது உறுதியாதலால், இந்தப் பிரச்னையில் முடிவுகட்ட வேண்டியது பெண்களே ஆவர்.

இரண்டாவது கர்ப்பத்தடையின் நோக்கம், மக்கள் உற்பத்தியைக்குறைப்பது மட்டுமல்ல. சில மிருகம் பல குட்டி பெறுவதைப் போல இல்லாமல், நல்ல திடம் வாய்ந்த உரம்பெற்ற உற்பத்தியே பெருக வேண்டும் என்பதுகூட அல்ல. நாட்டில் பொருளாதாரப் பெருக்கம் அதனால் ஏற்பட வேண்டும் என்பதும்கூட அல்ல. மக்கள் வாழ்வதற்கே பிறந்தவர்கள் என்ற நிலை உண்டாக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இருக்கவேண்டும்.

பெண்களின் அடிமைத்தனம் தொலையவேண்டுமானால், "நரக வாழ்வு" வாழாமல் மக்கள் நல்ல வாழ்வு வாழவேண்டுமானால், செயற்கை முறையில் கர்ப்பத்தடை கையாளப்படவேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபனை யிருக்கமுடியாது; நமது பார்ப்பனப் புரோகிதப் புத்தி படைத்த புண்ணிய புருஷர்களுக்கும், அவர்களின் பாதுகாவலரான காந்தியாரையும், தவிர.

காலம் போகிற போக்கை உணராத செக்கு மாடுகளுக்குச் சொல்லுகின்றோம். கர்ப்பத்தடை வேண்டுமா? வேண்டாமா? என்று பேசுவதற்கே அஞ்சுகிற சிகாமணிகளே! நவீன விஞ்ஞான வளர்ச்சியில், ஆண் பேண் சேர்க்கையே இல்லாமல் தேவையான அளவு தேவையான வகையில் குழந்தைகளை உற்பத்தி செய்யப்படலாம் என்று, அறிவின் சிகரமான பெரியார் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே 'இனி வரும் உலகம்' என்ற சிறிய புத்தகத்தில் கூறியிருப்பதைப்போல, மேலை நாடுகளில்—அமெரிக்காவில் - நடைபெறுகிறது என்கின்ற செய்திகளைப் படித்துப் பார்க்கும் நிலை இருந்தும் கூட, இச்சாதாரணக் கர்ப்பத்தடைக்கு ஏன் நீங்கள் மிரளவேண்டும்? அறிவுடைய பெண்கள், இப்பொழுது கர்ப்பத்தடையை நம் நாட்டில் கையாண்டுதான் வருகின்றார்கள். அதேபோல வைதீகம் எவ்வளவு காய்ந்தாலும்கூட ஆண் பெண் சேர்க்கையில்லாமல் குழந்தைபெறுகின்றமுறையும்இன்னுஞ் சில காலத்தில் எப்படியும் வந்துவிடத்தான் போகின்றது. ஆனால் இந்தச் செயற்கை முறையான கர்ப்பத்தடை ஏழைத் திராவிடப் பெண்களுக்கே, இன்று கட்டாயம் வேண்டியதாகும்.

மதுவிலக்குச் செய்வதைவிட, அவசியமாக இது சட்டமாகவே செய்யப் படவேண்டியது என்றாலும் கூட, இன்றைய நிலையில் இப்பிரச்னையானது, தொத்து வியாதிகளை ஒழிக்கும் பிரசாரத்தை விடத் தீவிரமாக சர்க்காரே செய்ய வேண்டுமென்பது தான் நமது நெடுநாளைய அபிப்பிராயமாகும்.

கர்ப்பத்தடை என்ற பெயரைக் கேட்டவுடனே, பயப்பட வேண்டியதற்குக் காரணமென்ன? கள்ளத்தனமாகத் தன் புருஷன் இல்லாத காலத்தில் மற்றொரு புருஷனோடு கூடி கரு உண்டான பிறகு, சமுதாய கட்டுப்பாட்டிற்கு அஞ்சி அதை அழிப்பதற்காகப் பயப்படுவதைப் போல, இதில் பயப்பட வேண்டிய காரணம் என்ன இருக்க முடியும்?

பெறத் தெரியாமல் பல குழந்தைகளைப் பெற்றுவிட்டு, ஏண்டா இந்தச் சனியன்களைப் பெற்றோம் என்று மனம் வெதும்பி, நவீன நல்ல தங்காள் ஆகும் பலரைப் பார்த்து வரும்போது கூட, வைதீகம் மனமிரங்கவில்லையானால், இந்த அக்கிரம வைதீகத்தைக் கட்டி இழுத்துச் சுடுகாட்டிற்குக் கொண்டு போவதைத் தவிர, இளைஞர்கள் செய்ய வேண்டிய வேலை வேறு எதுவாக இருக்க முடியும் என்று கேட்கின்றோம்.

மாநாட்டின் தலைவருடைய பேச்சைப் பிரசுரித்து, இக்கருப்பத் தடை வேண்டியதில்லை என்று நம் மாகாணப் பார்ப்பனப் பத்திரிகைகள் தலையங்கங்கள் எழுதிய பிறகே, மாநாட்டில் இப்பிரச்னை கை நழுவ விடப்பட்டிருக்கிறது என்கின்ற உண்மையைத் தோழர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆரியப் பார்ப்பனர்கள் கர்ப்பத்தடையைக் கேட்டு கலங்கித்தான் ஆக வேண்டும் என்பதிலே ஒரு நியாயமும் இருக்கிறது. அதாவது 100-க்கு 3-பேராய் இருக்கின்ற அவர்கள்,—பெரிய மைனாரிட்டியாயிருக்கின்ற அவர்கள்—கர்ப்பத்தடையினால், மேலும் குறைந்து விட்டால் என்ன செய்கிறது? என்கிற அச்சத்தினாலேயே இதை எதிர்க்கின்றார்கள் எனச் சொல்லலாம். அவர்களுடைய, தலைவனாயிருந்த ஹிட்லரைப் போல, அவர்களும் அதிகக் குழந்தைகளைப் பெறுகிற ஆரியப் பெண்களை ஆதரிக்கட்டும்! அதற்காகப் பரிசுத் திட்டம் வகுக்கட்டும்! நமக்கு அக்கறையில்லை. ஆனால், திராவிடப் பெண்களைப் பொறுத்த வரையில் அவர்களின் மத அழுக்கு மூட்டையைச் சுருட்

டிக் கட்டிக்கொள்வதுதான் நேர்மையும் நியாயமுமாகுமெனவும் எப்படியும் இந்த நிலை சமுதாயத்தில் ஏற்பட்டுத்தான் தீர வேண்டுமெனவும், ஏற்படத்தான் போகிறதெனவும் நாம் வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகின்றோம்.

4. சமூக விவகாரங்களைக் கவனிக்கத் தனியாக ஒரு பெண் மந்திரி நியமிக்கப்படல் வேண்டும் என்பது. இந்த நோக்கத்தை நாம் முழுமனதுடன் பாராட்டுகின்றோம். ஆனால் காரியத்தில் உருப்படுமா? எந்த அளவுக்கு இது பலன் தரும்? என்கிற சந்தேகம் அறிவுடைய யாருக்கும் உண்டாகாமல் இருக்காதது போலவே நமக்கும் இச் சந்தேகத்தைத் தான் கொடுக்கின்றதெனலாம்.

இப்பொழுது நம் மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் இலாக்காக்களையும், அவற்றை நிர்வகிக்கிற மந்திரிகளையும் மனதில் எண்ணிப் பார்த்தால், உணவு இலாகாவுக்கும் உணவு மந்திரிக்கும் உள்ள சம்பந்தம், கல்வி மந்திரிக்கும் கல்விக்கும் உள்ள சம்பந்தம், இப்படியே ஒவ்வொரு இலாகாவுக்கும் உள்ள அந்தந்த மந்திரிக்கும், கோகுலாஷ்டமிக்கும் குலாம் காதருக்கும் இருக்கிற சம்பந்தமாகவே இருப்பதைப் போல, சமூக விவகார மந்திரியும் அமைவதினாலே என்ன பலன் உண்டாக முடியும்? யாரேனும் ஒரு பார்ப்பன அம்மையார் இந்தப் பெயரால் மாதம் 2000, 3000 த்தை ஏப்பம் விடுவதற்குப் பயன் படமுடியுமே தவிர, சமூக விவகாரத்திற்கு உருவான பலன் ஏற்பட முடியாதென்றே துணிந்து கூற வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

ஆகவே, எல்லா இந்திய மாதர் மாநாடு என்பது ஒரு ஏமாற்று மாநாடாகும் என்பதும், மாநாட்டில் தலைமை தாங்கிய தோழியர் அனுசூயாபாய் அவர்கள் கூறிய சில நல்ல கருத்துக்கள், நம் சுயமரியாதைத் திராவிடப் பெண்கள் பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே நமக்குக் கூறியவைகளேயாகும் என்பதும், இத்தகைய கருத்துகள் பெண்ணுலகில் பூத்துக் காய்த்துப் பலன்தர வேண்டுமானால் திராவிட நாடு தனி நாடான நாளில்தான் அதற்கு வழிபிறக்க முடியும் என்பதும், நம் திராவிடப் பெண்களும் வீர இளைஞர்களும் அறிந்து கொள்ள வேண்டியதாகும் எனக் கூறி இதை இந்த அளவில் முடித்துக்கொள்ளுகின்றோம்.

## அடுத்த மலர்!

அடுத்த 10-1-48ம் நாள் வெளியாகும் மலர், பொங்கல் மலராக வெளிவரும் என்பதை, நம் வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொங்கல் மலர்! குடியரசு வெளியிடுகிறதா? பேச்சையே காணோமே! ஒரு விளம்பரம்கூடச் செய்ய வில்லையே! இவ்வாறு தோழர்கள் பலர் நினைக்கலாம்.

இவ்வாண்டில் பொங்கல் மலர் வெளியிட வேண்டுமென, நம் தோழர்கள் சிலர் அடிக்கடி கடிதம் எழுதி வற்புறுத்த ஆரம்பித்தார்கள். குடியரசு பொங்கலை ஆதரிக்கிறதா? என்றெல்லாம்கூட எழுதியிருந்தார்கள்.

போகிப் பண்டிகை, சங்கராந்தி என்கிற பொருந்தாத—அர்த்தமற்ற—ஆபாசக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்ட பெயர்களையும், அப்பெயர்களைக்கூறி விழாக் கொண்டாடுவதையும், அவ்விழாவினால் மூன்று நான்கு நாட்களுக்கு முன்னால் சமைத்த பொங்கல் சோற்றையுண்டு, ஏழை மக்கள் 'காலரா'விற்குப் பலியாகி வரும் கொடுமையையும், குடியரசு கண்டித்து வந்திருக்கின்றதென்றாலும், பொங்கலைப் பொறுத்த அளவில் குடியரசுக்கு எவ்வித மாற்றமுமில்லை என்பதைக் காட்டவே, இப்பொங்கல் மலரை வெளிப்படுத்துகின்றோம் என்பதைத் தோழர்களுக்கு முதலில் கூறிவிடுகின்றோம்.

ஆனால் விழா என்பது முன்னோர்கள் செய்துவந்தது என்ற காரணத்திற்காக அல்லாமல், அவ்விழாவைக் கொண்டாடுவதினால் நாம் அடையும் பலன் என்ன? அல்லது அவ்விழாவினால் நாம் எந்தவிதமான பலனை யடையலாம்? என்ற சிந்தனையின்மீதே கொண்டாடப்படவேண்டும் என்பதையும்,வாழ்வை வளம்படுத்த—சிறப்பிக்கவே விழா என்பது மக்களால் கொண்டாடப்பட வேண்டும் என்பதையும், நாம் விளக்கி வந்திருக்கின்ற காரணத்தினாலேயே இம்மலரை வெளியாக்குகின்றோம் எனவும், இம்மலரின் அமைப்பு, தோழர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக இருக்குமெனவும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கவர்ச்சியாகவும், படங்கள் நிரம்பியதாகவும், ஆர்ட் தாளிலுமாக பொங்கல்மலர் காட்சியளிக்கும் எனக் கருதுவீர்களேயானால் கட்டாயம் ஏமாந்து போவீர்கள்.

சிந்தனைச் சிற்பி பெரியார் அவர்கள் பல காலங்களில், பல இடங்களில் பேசிய அறிவுரைகள், அறவுரைகள் [இதுவரை புத்தக வடிவில் வெளி வராதவை] மலரில் இடம்பெறும்.

பெரியார் அவர்களின் புதிய கட்டுரைகளையும் தோழர்கள் எதிர்பார்க்கலாம். சுருக்கமாக மலர் என்பது, பெரியார் அவர்கள் அளிக்கும் அறிவு விருந்தாகவே ஒரு தனிப் புத்தகமாகவே இருக்கும்.

பச்சைத்தாள் வெளிப்புறத்தை அழகு செய்ய குடியரசு அமைப்பிலேயே 20-பக்கங்களாகும் இம்மலர்.

விலையோ எப்போதும் போல இரண்டணாக்கள் தான். இதற்காக விலையை ஒன்றும் கூட்டவில்லை

சிலநூறு பிரதிகளே அதிகமாக அச்சிடுகின்றோமாதலால், தேவையான அதிகப் பிரதிகளுக்கு முன்கூட்டியே அதாவது 7-1-48 ம் நாள் புதன்கிழமையே, ஏஜண்டுத் தோழர்களும், தனி நபர்களும் தெரிவித்துவிட வேண்டுமென்வும், காலம் தவறி வருவன கவனிக்கப் படமாட்டா வெனவும் அறிவித்துக் கொள்கின்றோம்.

## அறிவிப்பு

பிரதி மாதமும் 10 தேதிக்குள், அதற்கு முந்திய மாதத்திய பட்டியலுக்குத் தொகை அனுப்பாத ஏஜண்டுத் தோழர்களுக்கு, முன்னறிவிப்பின்றியே பத்திரிகை அனுப்புவதை நிறுத்திவிடப்படும் என்பதைக் கண்டிப்பாய் அறிய வேண்டுகிறோம்.

மானேஜர்.

## ஒரு திருத்தம்

சிறுவர்களின் கல்வி நிலை என்ற கட்டுரையின் 2வது கலம் 17வது வரியில், கல்வி மந்தியார் என்றிருப்பதை மந்திரியார் என மாற்றிப் படிக்க வேண்டுகிறோம். இத்தவறு ஏற்பட்டதற்கு நாம் மிக வருந்துகின்றோம்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

செலவழிக்க இசையான். ஆனால் இவர்களுக்கெல்லாம் மாறுபட்டவர் பெரியார். இவரும் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசையோடுதான் ஒரு மனிதனுடைய டாம்பீக வாழ்வுக்குப் போதுமான அளவுக்குப் பணம் சம்பாதித்துவிட்டார். இவருக்கு மனைவி யில்லை. மக்களில்லை. தான் சம்பாதித்த பொருளைக் கொண்டு எடுபிடி ஆள் நாலைந்து பேரை வைத்துக் கொண்டு எவ்வளவோ சுகமாக வாழலாம். எப்படித் தன் பணத்தை வாரி இறைத்தாலும், ஏனென்று கேட்க ஆளில்லை. அப்படி இருந்தும் பெரியார் என்ன செய்கிறார்? அவர் இப்படிச் சுகவாழ்க்கை அனுபவிப்பதை விட்டு இத்தள்ளாத வயதில் கூட,தனது நேரம் பூராவையும் பொதுநல ஊழியத்திலேயே செலவழித்து வருகிறார். ஆகவேதான் பெரியாரில் ஒரு பெரியார் என்று இவரை அழைக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய பெரியார் இருந்ததாக உலக சரித்திரம் கூறக் காணோம். நாமும் இவரைத் தவிர வேறோர் பெரியாரைக் கண்டோமில்லை. இனியும் காணப் போவதில்லை என்பது தான் எனது அபிப்பிராயம். ஆகவே தான் நான் முதலிலேயே திராவிட நாடு அதிர்ஷ்டம் பொருந்திய நாடு; நாம் அதில் பிறந்திருப்பதால் அதிர்ஷ்டசாலிகள் ஆனோம் என்றேன். ஏனெனில் இத்தகைய ஒரு பெரியாரின் வாழ்நாளில் பிறந்திருக்கும் பேறு பெற்றுளோம், ஆதலினால்.

பெரியாருக்குத் தனிப்பட்ட முறையில் யார் என்ன தீங்கு செய்தாலும், செய்திருந்தாலும் அதை, மனித சுபாவமே அப்படித்தான் என்று கூறிப் பொறுத்துக் கொண்டு விடுவார். ஆனால் இயக்கத்தைப் பொறுத்த மட்டில் சிறிது தவறு செய்து விட்டாலும் உளம் பொறார். சுலபத்தில் ஆத்திரம் கொள்வார். தயை தாட்சண்யமின்றிச் சற்றும் பொறுப்பில்லாதவன், முட்டாள், போக்கிரி, சோம்பேறிப் பயல் என்றெல்லாம் கூடச் சமய சந்தர்ப்பம் பாராமல் ஏசிவிடுவார். இயக்கத்தின் மீது அவ்வளவு பற்றுதல் உள்ளவர். அவரது தன்னலமற்ற இந்த இயக்கப் பற்றுதல்தான் இந்த ஏசல் மொழிகளைக் கேட்டுக் கொண்டும் நமது இளைஞர்களை "பெரியார் வாழ்க வாழ்க" என வாழ்த்தொலி கூறிப் பின்பற்றிச் செல்லும்படி தூண்டுகிறது.

வாலிபர்கள் என்றாலே பெரியாரின் அகராதியில் அநுபவம் அற்றவர்கள் என்றுதான் பொருள். ஆனால் காங்கரஸ்காரர் அகராதியிலோ அவர்கள் தான் நிகழ்காலச் சிற்பிகள், எதிர்கால மன்னர்கள். தமது இஷ்டப்படி தண்டவாளத்தைப் பெயர்த்துத் தம்மைப் பதவியில் உட்காரவைக்கக்கூடியவர்களும் அவர்கள்தான் என்பார்கள். ஆனால் இதைப் பெரியார் ஒப்புக்கொள்ளமாட்டார். ஒப்புக்கொள்ளாமலிருக்கக் காரணமும் உண்டு. எனது அநுபவமும் அதுதான். நான் ஒரு சமயம், தோழர் அய்யப்பன் அவர்கள் தலைமையில் ஈரோட்டில் நடந்த ஒரு மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தேன். அதற்குச் செல்லும்போது ரயிலில் நன்றாகத் தூங்கிவிட்டேன். வண்டி ஈரோட்டைத் தாண்டிச் சென்றபிறகுதான் விழித்துக்கொண்டேன். ஆகவே அடுத்த ஸ்டேஷனில் இறங்கித்திரும்பிவர மணி 11 ஆகிவிட்டது. நான் பேசவேண்டிய கட்டமும் வந்துவிடவே, நானும் எனது பேச்சைத் துவங்கிவிட்டேன். தலைவர் ஏதோ அவசர வேலையாக 1மணி வண்டிக்கே போகவேண்டியிருந்ததால், பெரியார் அவர்கள் 12-30 மணிக்கே கூட்டத்தை முடித்துவிட விரும்பி 12-15க்கே எச்சரிக்கை செய்தார். நான் பேசிக்கொண்டிருக்கும்போதே தலைவரை எழுப்பி அழைத்துச் சென்றுவிட்டால், நான் எங்கே கோபித்துக்கொள்வேனோ என்ற பயம் ஒருபுறம் தன்னை வாட்ட, அவரைக் காலாகாலத்தில் அனுப்பிவைக்கவேண்டிய தமது பொறுப்பு ஒருபுறம் வேதனைசெய்ய, என்னை நிறுத்திக்கொள்ளும்படி ஜாடையாகக் கேட்டார். எனக்கு அப்போது மண்டைக்கர்வம் ரொம்ப அதிகம். ஆகவே இவரென்ன நம்மைத் தடைசெய்வது என்று நினைத்து'இது என்ன சர்வாதிகாரமா' என்று கேட்டுவிட்டு எதிரிலிருந்த தோழர்களைப்பார்த்தேன். அவர்கள் மட்டுமென்ன சளைத்தவர்களா? "go on" என்று, அதாவது "நிறுத்தாதீர்கள், தொடர்ந்து பேசுங்கள்" என்று கூறிவிட்டார்கள். நானும் விடாப்பிடியாகப் பேசிக்கொண்டே இருந்தேன். குறிப்பிட்ட நேரம் வரவும் பெரியார், தோழர் அய்யப்பன் அவர்களை அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் பேசி முடிந்ததும் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டதுபோல் நினைத்துக்கொண்டு, மாநாட்டு உணவைக்கூடச் சட்டைசெய்யாமல்கோபத்தோடு ஹோட்டலில் சென்று சாப்பிட்டுவிட்டேன். தோழரை வழியனுப்பிவிட்டுவந்த பெரியார் அவர்கள், திருட்டுப்பூனை கருவாட்டுத் துண்டுக்காக மோப்பம் பிடித்துத் திரிவது போல், கடைத்தெருவில் திரிந்து கொண்டிருந்த என்னைக் கண்டுபிடித்துவிட்டார். நான் பாராததுபோல் கொஞ்சம் "ரப்அண்டப்" ஆக சற்று அசட்டையாக நடக்க ஆரம்பித்தேன். ஆனால் அவரா விடுகிறார். "என்னாங்க சாப்பிட்டீங்களா" என்று உரக்கக் கேட்டுவிட்டார். எனது சப்த நாடிகளும் தளர்ந்துவிட்டது அதைக் கேட்டதும். எனக்கு ரொம்ப அவமானமாகிவிட்டது. நாம்தான் தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்ந்துகொண்டேன். ஆகவேதான் வாலிபத் தோழர்களுக்கு எச்சரிக்கைசெய்ய விரும்புகிறேன்.

பெரியார் உங்களை நன்கு அறிந்துள்ளார். ஆகவே அவரை உங்களால் ஏமாற்றமுடியாது. அவரும் உங்கள் நன்மைக்காகத்தான் பாடுபட்டு வருகிறார். ஆதலால் அவர் வழி நடவுங்கள். நடந்தால் இன்புற்று வாழலாம். இன்றேல் "வெங்கடரமண கோவிந்தா"வென்று கூவிக்கொண்டு தெருவில் உருளவேண்டியதுதான்.

[குறிப்பு:- இதன் தொடர்ச்சி 17-1-48ம் நாள் மலரில் வெளிவரும். ஆ—ர்]

## தோழர், ஜி. டி. நாயுடு அவர்களின் அறிவுரை.

**17—1—48 ம் நாள் வெளிவரும்.**

28—12—47-ம் நாள், கோயம்புத்தூர் "கோபால் பாக்" பங்களாவில் நம் மாகாண மந்திரிகளான தோழர்கள், எச். சீதாராம ரெட்டியார், கே. மாதவ மேனன், டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் ஆகியவர்களை அழைத்து இன்னீர் விருந்தும் அளித்து அறிவுவிருந்தும் வழங்கிய, தோழர் ஜி. டி. நாயுடு அவர்களின் வரவேற்புரை, 17—1—48-ம் நாள் குடிஅரசில் வெளிவரும்.

## பகற்கொள்ளைக்குமுன்னால் வழிப்பறி.

ஒரு பக்தர் திருப்பதி யாத்திரை போய் அங்குள்ள மகந்து முதலியவர்களால் பகற் கொள்ளைக்கு ஆளாகுமுன், அப்பக்தருக்கு ஒரு வழிப்போக்கன் நஞ்சு கலந்த மிட்டாயியைக் கொடுத்து வழிப்பறி செய்ய எண்ணினான். வழிப்போக்கன் இப்பொழுது ரிமாண்டில் இருக்கின்றான். பகற் கொள்ளைக்காரர்களோ...........

## சுதந்தர மென்பது நிற மாற்றமே.

சர்க்கார் முதலாளிகள் நன்மைக்காகவே இதுவரை சட்டம் இயற்றி இருக்கிறது. பழைய அதிகார வர்க்கத்திற்கும் தற்போது இருப்பதற்கும் சிறிதும் வித்தியாசமில்லை. அந்நிய ஆதிக்கத்தின் கீழ் புதிய சட்டங்களை எதிர்த்தவர்கள், அதே சட்டங்களை இன்று இயற்றுகின்றனர்.

சாந்தோஸ்.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

டாக்கும் சங்கதியாகவே தோன்றுகிறது. இராமன்தான் ஆண்டு கொண்டு போகட்டுமே என்று நினைத்தாலும், பிறகு இப்படிப்பட்டவர்கள் என்னதான் செய்ய மாட்டார்கள்? பரதன் உயிருக்கே ஆபத்தாய் முடியும் என்பது உண்மை. ஆம்! ஆம்! இதில் ஏதோ சூழ்ச்சி புதைந்திருக்கிறது. மந்தரை! உன் மீது நான் வீணாகக் கோபித்துக் கொண்டேன். நம் குரு வசிஷ்டர் கூட,இதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்பதைப் பார்த்தால் உண்மையாக இது சூழ்ச்சிதான். நீ சொன்னது போல் எனக்கு ஆபத்துதான், கேடுதான். என் மகன் பரதன் வாழ்வுக்கும்—ஏன்—அவன் உயிருக்கும் ஆபத்துதான். நாம் உயிரோடு வாழ்வதில் பயனில்லை! பயனில்லை! அடி மந்தரை! என் அருமைத் தோழி! இதற்கு நீதான் ஒரு வகை சொல்லவேண்டும். எனக்கு இப்போது என்ன செய்வதென்றே தோன்றவில்லை. என் புத்தியே எனக்குச் சுவாதீனம் இல்லை. வயிற்றுக்குள் என்னமோ குழம்புகிறது. மனம் பதறுகிறது. நெஞ்சம் குமுறுகிறது. ரத்தம் கொதிக்கிறது. தலை நடுங்குகிறது. அம்மா! நீயே துணை! நீயே கதி! நீதான் என்னையும் என் மகனையும் இந்தக் கேட்டிலிருந்தும், ஆபத்திலிருந்தும்,எதிரிகளிடமிருந்தும் காப்பாற்றிக் கொடுக்கவேண்டும். உன்னையே தஞ்சமடைகின்றேன். (என்று கூறி அழுகுரலுடன் மந்தரைமீது சாய்ந்து விழுகின்றாள்).

மந்தரை:- (தானும் அழுகுரலுடன்) அம்மா! கைகேயி! துக்கப்படாதே! அழுவதில் பயனில்லை! ஜாக்கிரதையாய் வேலை செய்ய வேண்டும்! நான் சொல்லுகிறபடி கேள்! ஒன்றும் காலம் கடந்துவிடவில்லை. மார்க்கமில்லாமலும் போகவில்லை. முதலில் நாளை நடக்கப்போகும் பட்டாபிஷேகம் நிறுத்தப்பட வேண்டும். பிறகு இராமன் நாடு கடத்தப்படவேண்டும். இவ்வளவு சூழ்ச்சிக்கும் துரோகத்துக்கும் சம்மதித்து, நாடு பெறப் பேராசை கொண்ட இவன், இங்கு இருந்தால் பரதன் உயிருக்குக் கேடு செய்வதில் சிறிதும் பின் வாங்கமாட்டான். ஆதலால் அவன் நாடு கடத்தப்படாக வேண்டும். அதுவும் காட்டிற்கே துரத்தப்பட வேண்டும். பிறகு பரதனை வரவழைத்து முடிசூட்டு வைபவம் செய்து கொள்ளலாம். தெரிந்ததா?

கைகேயி:- ஆம்! இவை மிகவும் சரியான காரியந்தான். நல்ல யோசனையுந்தான். அதை எப்படிச் செய்வது? அதற்கும் நீதான் வழி சொல்ல வேண்டும்.

மந்தரை:- அம்மா! உனக்குத் தெரியாதது ஒன்றும் நான் சொல்லிவிடப் போவதில்லை. என்றாலும் சொல்லுகிறேன் கேள்! அரசர் உனக்குக் கொஞ்சகாலத்துக்கு முன்பு, இரண்டு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அதாவது இரண்டு விஷயம் நீ என்ன கேட்டாலும் அவற்றைத் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கின்றார். அது எப்போது என்று கேட்பாயோ? இதோ சொல்லுகின்றேன். முன்னொரு காலத்தில் மீனக்கொடியுடையவனாகிய சம்பாராசுரன் என்னும் தமிழரசனோடு, திவேதன் என்னும் அரசன் போரிடும்போது, தமிழரசனை எதிர்க்கமாட்டாமல் திவேதன் உனது கணவனை உதவிக் கழைத்தான். உன் கணவன் அதற்கிசைந்து அத்தமிழரசனுடன் யுத்தத்திற்குச் சென்றான். அதில் உன் கணவன் அடிபட்டு மூர்ச்சையாகி, எதிரிகையில் சிக்கும் சமயத்தில், நீ மிக சாமர்த்தியமாகத் தேரைச் செலுத்தி அவரைத் தப்பித்துக் கொள்ளச் செய்திருக்கின்றாய். மறுபடியும் ஒரு சமயம் இதுபோலவே உன் கணவனுக்கு ஆபத்து ஏற்பட்டபோதும், இதுபோலவே மிக சாமர்த்தியமாய்த் தேரை நடத்தி அவரது உயிரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கிறாய். அப்போது நீ இல்லாதிருந்தால், அவர் பாடு ஆபத்தாய் முடிந்திருக்கும். ஆதலால் நீ செய்த இந்த இரண்டு உதவிக்கும், உன் கணவர் நன்றி காட்டுவதற்காக உன்னை "உனக்கு வேண்டிய ஏதாவது இரண்டு விஷயங்களைக் கேள். அவை எவையானாலும் தருகிறேன்" என்று வாக்குறுதி தந்திருக்கிறார். அவற்றை இப்போது கேள்! ஒன்று. நாளை நடக்கும் பட்டாபிஷேகம் பரதனுக்கு நடக்க வேண்டும். மற்றொன்று. இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்று கேள்! மன்னன் மறுக்காமல் கொடுத்துத்தான் ஆகவேண்டும்! இதைக் கேட்பதில் பயப்படவேண்டியதில்லை. நாடு ஏற்கனவே உன்னுடையதுதான். இது நியாயமாகவே பரதனுக்குச் சேர வேண்டியதுதான். எப்படியென்றால், உன்னைத்திருமணம்செய்து கொள்ள வேண்டுமென்று மன்னன் உன் தந்தையைக் கேட்கும் போது, உன் தந்தை உன்னை 60,003ம் தாரமாகக் கொடுக்க முடியாதென்று மறுத்துவிட்டார். அதற்கு மன்னவன் உன்னையே முதலாவது தாரமாகக் கருதிப், பட்ட மகிஷியாய் உன்னையே ஏற்றுக்கொள்வதாகவும்,அப்படிப் பட்ட மகிஷியாகிய உன் வயிற்றில் பிறக்கும் பிள்ளைக்கே நாட்டைப் பட்டாபிஷேகம் செய்து கொடுத்து விடுவதாகவும் வாக்குறுதிசெய்து, அன்றே நாட்டைச் சுல்கமாகக் கொடுத்துவிட்டார். அதிலிருந்து மன்னன் உனக்காக நாட்டை ஆட்சி புரிந்து வருகின்றார் என்றுதான் சொல்லவேண்டும். ஆதலால் நாட்டைப் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்று கேட்பதில் யாதொரு நியாய விரோதமுமில்லை. அயோத்தி நாட்டைப் பற்றி இந்தப்படியான ஒரு உரிமை உனக்கும் உன் மகனுக்கும் இருந்ததினால்தான், மன்னன் பரதனை அவன் பாட்டன் ஊருக்கு விரட்டிவிட்டதும், இராமன் உன்னிடமும் குடிகளிடமும் வெகு அன்புடையவன்போல் நடந்துவரும்படி செய்துவந்ததும், பரதன் இல்லாதபோது உன் தந்தைக்கு அழைப்பு அனுப்பாமலும், உனக்குத் தெரிவிக்காமலும், தெரியாதிருக்கும்படியும் செய்து திருட்டுத்தனமாக முடிசூட்டை அவசரஅவசரமாக நடத்தத் துவங்கினதும், மன்னன் மந்திரிகளிடமும் இராமனிடமும் "பரதன் வருவதற்கு முன் முடிசூட்டு நடந்தாகவேண்டும்" என்று சொல்லி அவசரப்படுத்தியதுமாகும். அப்படிக்கு இல்லாவிட்டால் இந்தப்படி ஏன் நடக்கவேண்டும்? ஆதலால் நீ வேறு ஒன்றும் யோசிக்கவேண்டாம்! நாடு உனக்குச் சொந்தம் என்கின்ற உண்மை இதெல்லாம் எனக்குத் தெரிந்த காரியமேயாகும். உனக்கும் தெரிந்திருக்குமென்றே கருதி இருந்தேன். உன் புருஷன் உன்னிடம் வைத்த பொய்க் காதலாலும், இராமன் உன்னிடம் நடந்துகாட்டிய பொய் அன்பினாலும் நீ மறந்துவிட்டாய். அரசனிடம் நீ இதை யெல்லாம் சொல்லிக்காட்டி, நாடு பரதனுக்கு

ஆக்கவேண்டும் என்றும், இராமன் காட்டுக்குப் போகவேண்டும் என்றும், கடிந்து கண்டிப்பாகச் சொன்னாயே யானால், அரசன் தலைகுனிந்து தனது வஞ்சகத்துக்கு வெட்கப்பட்டுப் பேசாமல் ஒப்புக்கொள்ளுவாரே யொழிய மாட்டேன் என்று மறுத்துக் கூறவே மாட்டார். சந்தேகமே வேண்டாம்! நீ மாத்திரம் தைரியமாகவும், பிடிவாதமாகவும் இருக்க வேண்டும்! மனம் இளகி ஏமாந்து விடாதே!

கைகேயி:- மந்தரே! நீ சொன்னது எல்லாம் உண்மையே! இப்போதுதான் எனக்கு ஒவ்வொன்றாய் ஞாபகம் வருகிறது. உண்மையில் அரசனையும் இராமனையும் நம்பி ஏமாந்து போனேன். நீந்தத் தெரியாத ஒருத்தி ஆழமான ஆற்றில் நழுவி விழுந்து முழுகப்போகும் கடைசித் தருணத்தில், தோணி கொண்டுவந்து தூக்கிப் போட்டுக் கரையேற்றினதுபோல், எனக்கு நீ நல்ல ஆபத்துக் காலத்தில் உதவிசெய்தாய். உனக்கு எப்படி நன்றி காட்டுவேன்! நீ இல்லாதிருந்தால் என்கதி என்ன ஆவது? என் பிள்ளை கதி என்னாவது? இந்த நாடு எப்படியோ போய்த் தொலையட்டும்! என்றாலும் என்னுடையவும் என் மகனுடையவும் வாழ்வு என்னாவது? அய்யோ! நினைக்க நினைக்கப் பயமாய்இருக்கிறதே. இவ்வளவு வஞ்சகனா அரசன்? இவ்வளவு அயோக்கியனா இராமன்? இந்தக் குருவும் மந்திரிகளும் இவ்வளவு இழி மக்களா? கொஞ்சம் கூட அறியாமல் போனேனே! இப்படிப் பட்ட பயித்தியக்காரியாகிய நான் எதற்காக உலகில் இருக்கவேண்டும்? தகுதி உடையவர்களுக்குத்தான் உலகம். அறிவற்ற என்போன்ற பயித்தியக்காரிகள் உலகத்தை விட்டு விடுவதே மேல். என் மகனுக்காகப் பார்க்கின்றேன். இல்லாவிட்டால் இப்படிப்பட்ட வஞ்சக அயோக்கியர்கள் முன்னால் வாழ்வதைவிட, உயிர் விடுவதே மேல் என்று துணிவேன். இருக்கட்டும்! இப்போது என்ன முழுகிப் போய் விட்டது! வரட்டும் மன்னவன்! இரண்டிலொன்று பார்த்து விடுகிறேன்! நான் இனி ஏமாந்து போவேன் என்று நீ சிறிதும் கருதாதே! போய் உன் வேலையைப் பார். (என்று அனுப்பிவிடுகின்றாள்.)

(காட்சி முடிகிறது.)

# நெல் வேலியிலா பஞ்சம்?

(டி. பி. அருணாசலம்)

திராவிட நாட்டிலே மிகப் பெரிய ஜில்லாவாகத் தலைசிறந்து விளங்குவது நெல்லை மாவட்டம். தாம்பிரவருணி ஆறும், வற்றாத கடம்பாக் குளமும், மற்றும் குளங்களும், எரிகளும் இம்மாவட்டத்தை வளம்படுத்துவனவாகும். நெல் விளையும் நஞ்சைகளே நிரம்பிய காரணத்தினால்தான் இதற்குத் திருநெல்வேலி வட்டம் எனப் பெயர் என்பர். இத்தகைய பகுதியில் தான் 1½-மாத காலமாகப் பசியும், பட்டினியும், வேலையில்லாத் திண்டாட்டங்களும், அதன் காரணமாக மக்கள் அநாதைகளாகிக் குடும்பம் குடும்பமாக, வெவ்வேறு நகரங்களை நோக்கி நாள்தோறும் நடந்து செல்லும் கோரக்காட்சிகளும் தாண்டவமாடுகின்றன. இதைப் பார்க்கும் எவர் நெஞ்சமும் பதைபதைக்கும்.

கோவில்பட்டி, எட்டையாபுரம், மற்றும் சுற்றுக் கிராமங்கள் முழுவதும் இந்தப் பஞ்சத்திற்குப் பலியாகியிருக்கின்றன. இக்கிராமங்களில் குடும்பம் ஒன்றுக்கு ½-படி நெல் வீதம் கொடுக்கின்றார்கள். இந்த நெல்லை விட்டால் வேறு தானியம் இல்லை.

தூத்துக்குடி போன்ற நகரங்களில் 8-அவுன்ஸ் நெல்லோ, அரிசியோ கொடுத்து, மேற்கொண்டு 2-அவுன்ஸ் கம்பு, சோளம் அல்லது கோதுமை கொடுத்து வருகின்றார்கள். நகர மக்களோ, இந்த 2-அவுன்ஸ் உபரித் தானியத்தை வாங்கிப் பெரும்பாலும் மாடுகளுக்கே அரைத்து ஊற்றுகிறார்கள். இந்த அக்கிரமத்தை உடனடியாக நிறுத்தி இந்த உபரித் தானியத்தையாவது இக்கிராம மக்களுக்கு உடனே வழங்குவதற்கு என் ஏற்பாடு செய்யக் கூடாது?

அவர்கள் மனிதர்கள் இல்லை என்பது ஆட்சியாளர் கருத்தா? இந்நாட்டின் உயிர் நாடி இக்கிராமங்கள் அல்லவா? இக்கிராம மக்கள் பாடுபடுவதை நிறுத்துவார்களேயானால், அரசாங்கமே கவிழ்ந்து விடுமே என்ற அறிவு ஆளவந்தார்களுக்கு ஏன் உண்டாகவில்லை?

மழை இல்லாத காரணத்தால் ஏழை விவசாயிகள் நிலங்களைச் சும்மா போட்டு விட்டுப், பிழைப்புக்கு வழி தேடிக்குடும்பங்களோடு மதுரை, சோளவந்தான், தூத்துக்குடி போன்ற பட்டினங்களை நோக்கிச் செல்கின்றார்கள். தூத்துக்குடிக்கு வந்த மக்களின் நிலையை இங்கு குறிப்பிடுகின்றேன்.

ஏழைப்பாட்டாளிகள் இங்கு உப்பளங்களில் வந்து புகுந்து வேலை பார்க்கின்றார்கள். சிலர் மூட்டைகள் சுமக்கவும் செய்கிறார்கள். சிலர் வேலை செய்ய, வேலை கிடைக்காமல் பிச்சை எடுக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். இவர்களில் உப்பளத்தில் வேலை செய்கிறவர்களுக்கு, எந்த அளவு கூலி என்பது தெரியாததினால், அங்கே வேலை வாங்குகின்ற கங்காணிகள் இவர்களின் கூலி ரூ. 1-8-0 யை வாங்கி 0-6-0 அணாதான் கொடுக்கின்றார்கள். இப்பாவிகளின் அக்கிரமங்களுக்கு ஆளாகியும், ஏதோ இந்த அளவாவது கிடைக்கிறதே என்றெண்ணிக் கூலிமக்களின் கூட்டம்பெருகினாலும், அந்த ஆறணாவை வாங்கி ஜீவனம் செய்ய முடியாமல் அவர்கள் ரத்தக்கண்ணீர் வடிக்கின்றார்கள். இந்த ஜனங்களுக்கு ரேஷன் கார்டாவது உடனே கொடுக்கின்றார்களா? ஒருவாரம் வரை அலையச் செய்கிறார்கள் ரேஷன் அதிகாரிகள். ஏழை மக்கள் சாப்பாட்டிற்கு என்ன செய்வார்கள் என்று, இந்த அநியாய அதிகாரிகள் என் நினைத்துக் கூடப்பார்க்கக் கூடாது? எங்கெங்கோ பசி, பட்டினி, அகதி என்றால், இங்கே கதறுகின்ற நம் காங்கரஸ் கம்யூனிஸ்ட் தோழர்கள்—குறிப்பாக இவ்வட்டாரத்தில் உள்ளவர்கள், என் வாயடைத்து நிற்கிறார்கள்?

நெல்லை மாவட்ட கலைக்டரோ, உணவுப் பொருள் நிலை திருப்திகரமாயிருக்கிறது என உணவு மந்திரிக்குத் தாக்கீது அனுப்புகின்றார். பொதுஜனங்கள் என்றால் நகர மக்கள் என்பது தான் கலைக்டரின் எண்ணம் போலும். 18 வயது இளைஞன் ஒருவன் 11-12-47 ல் விருதுநகர் ரயில்வே நிலையத்தருகே பசியின் கொடுமையால் உயிர் துறந்தான். கோவில் பட்டியில், ஏழை மக்கள் கும்பல் கும்பலாக வந்து கொடுந் துன்பத்திற்காளாகின்றார்கள். இவ்வாறு நகரங்களில் காணப்படும் இந்த நிலைமை கூட ஏன் நம் கலைக்டர் கண்களுக்கு தெரிவதில்லை. ஏழை மக்களின் துன்பத்தைப் போக்க வழிதெரியாத இந்தக் கலைக்டர், இருட்டடிப்புச் செய்வதிலே மட்டும் இவ்வளவு அக்கறை ஏன் காட்டுகின்றார்? பட்டினி மக்கள், உணவுக் கஷ்டத்தால் மரண வாசலில் இருக்கின்றோம் என்று தெரிவிக்க 20 நாளைக்கு முன்பு கோவில்பட்டியில் ரெவினியூ டிவிஷனல் ஆபிஸரிடம் சென்றார்களாம். அவர் டிசம்பர் முடிகிற வரையில் ஒன்றும் சொல்லாதீர்கள் என்றாராம்.

இப்பட்டினிக் கூட்டத்திற்குக் குடியிருப்பிற்கு வீட்டுக் கஷ்டம் வேறு. மண்ணெண்ணைக் கஷ்டம் வேறு. வேலையோ கிடைப்பதில்லை. இந்த நிலைமையை நீடிக்க விடலாமா? ஆட்சியாளர் கவனிக்க வேண்டியது இந்த நேரத்தில் அகதிகள் பிரச்னை

அறக்கட்டளை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

எனவே, முதலில் நம் நாட்டு மன்னர்களிடம் செல்வாக்குப் பெறப் பல வகையிலும் முயற்சித்து வெற்றியும் பெற்றனர். மன்னர்களை யெல்லாம் "நீங்கள் மஹா விஷ்ணுவின் அவதாரம்" என்றெல்லாம் கூறி எப்படியெப்படியோ தங்கள் கைவசப்படுத்திக் கொண்டனர். அவர்களது கொள்கையை ஒப்புக்கொள்ளாது ஒரேயடியாகவே எதிர்த்து வந்த மன்னர்களைச் சதிசெய்து ஒழித்ததாகவும் தெரிகிறது. உதாரணத்துக்காக "இரணியன்" கதையைக் கூறலாம். அதைத் தனியாக ஒரு நாளைக்குக் கூறுகிறேன்.

மேற்சொன்னபடி நமது மன்னர்களைத் தங்கள் கைவசப்படுத்திக் கொண்டவுடன், முதலாவதாக ஆரியப் பார்ப்பனர்கள் செய்த வேலை ஜாதிப் பாகுபாடுதான்.

இன்றைக்கும் நம் நாட்டில் நாம் 97 பேராகவும், ஆரியர்கள் 100க்கு 3 பேராகவுமே இருந்து வருகிறோம். இவ்வாறு மிக மிகக் குறைந்த அளவு எண்ணிக்கையுள்ள சமூகமாய் இன்றைக்கும் இருக்கின்றார்கள். அப்படியானால் முன்பு எவ்வளவு குறைவாய் இருந்திருப்பார்கள். இதனாலேயே, என்றைக்கு இருந்தாலும் திராடர்கள் நம்மை ஒரு நாளைக் குத் துரத்தியே தீருவார்கள் என்று கருதினார்கள். அதனால் நமக்குள் பற்பல ஜாதிகளை ஏற்படுத்தி விட்டார்கள். நம்மிலேயே ஒருவரையொருவர் கேவலமாகவும், இழிவாகவும் பேசிக் கொள்ளச் செய்தனர். என்றும் ஒன்று சேராமல் இருப்பதற்காக வேண்டிய காரியங்களை யெல்லாம் செய்து முடித்தார்கள். இதற்காகத்தான் ஜாதிகளை நம்மிடையே ஏற்படுத்தி விட்டார்கள். இதற்கு அந்தக் காலத்திய மன்னர்கள், ஆரியப் பார்ப்பனர்களுக்கு ஆதரவாக இருந்து விட்டனர். நமது மன்னர்களின் ஆதரவைக்கொண்டு, நமக்குள் ஜாதிகள் வகுத்து, எல்லா ஜாதிகளுக்கும் உயர்ந்த ஜாதியினராகத் தங்களை வைத்துக்கொண்டனர்.

நமது மன்னர்களுக்குக் குருவாகவும் விளங்கினார்கள். இந்த ஆரியர்களைக் குருவாகக் கொண்டதன் விளைவாகத்தான், நமது மன்னர்கள் அடியோடு நாசமாய்ப் போனார்கள். எக்காலத்தும், யாருக்கும் அடிமையாகாத நம்நாடு, பிறகு வெள்ளையனுக்கு அடிமைப்பட்டது. இவைகளைப் பற்றி யெல்லாம் விரிவாகப் பிறகு சொல்லுகிறேன்.

இதுவரை நான் சொன்னதிலிருந்து நமக்குள் ஜாதி வித்தியாசங்கள் யாரால் எப்பொழுது? எதற்காக? ஏற்பட்டது என்பதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த ஜாதி வேற்றுமையை அடியோடு ஒழிக்க வேண்டும். திராவிடர்கள் ஒன்று பட்டு வாழவேண்டும். இதற்காகத்தான் சுயமரியாதை இயக்கம் தோன்றியது என்பதை உணருங்கள்.

---

ஏடுகளில் எழுதி வைத்திருக்கின்ற காரணத்தாலேயே ஒன்றை நம்பிவிடாதீர்கள். சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே நம்பும்படி வற்புறுத்தப்பட்ட பழக்கத்தினால் மட்டும் ஒன்றையும் நம்பி விடாதீர்கள். உங்கள் பகுத்தறிவை உபயோகித்து, நன்றாய்த்துருவிப் பார்த்து அவை எல்லோருக்கும் நன்மை பயக்கக் கூடியதாயின், அவைகளை நம்புங்கள். அவைகட்கேற்ப நடக்க முயலுங்கள். மற்றவர்களையும், அவ்வாறு நடக்க வற்புறுத்துங்கள்.

கௌதம புத்தர்.

*　　　*

இந்தியா தேசத்தில் மூவாயிரம் கடவுள்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் ஹிந்துக்கள் மற்றொரு கடவுளை உண்டாக்குகின்ற பாதிரிமார்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிரீ திங்க்கர்.

---

அல்ல. உடனே இந்தப் பட்டினிப் பட்டாளங்களுக்கு உணவுக்கு வழிதேடவேண்டும். அவர்களைக்காப்பாற்றுவதற்காகமட்டுமல்ல! அடுத்த வருஷத்திலும் இந்த நிலைமை நீடிக்காமல், மறுபடியும் அவர்கள் விவசாயத்தில் ஈடுபட, அதனால் நகர மக்கள் கஷ்டமின்றி வாழ இவ்வேற்பாட்டை விரைந்து செய்யவேண்டும்! செய்வார்களா?








சாவோலை.

தீட்டியவர்: தில்லை வில்லாளன்.
விலை அணா எட்டு.
வெளியிடுவோர்: எரிமலைப்பதிப்பகம்,
துறையூர், திருச்சி.

ஆரியர் நுழைந்தபின் திணிக்கப்பட்ட இந்து மதத்தின் கொடுமையால் திராவிடம் சீரழிந்து கிடக்கும் நிலைமையைச் சரித்திர ஆதாரங்களுடன், நல்ல நடையில் விளக்கமான வருணனையோடு இடித்திடித்துக் கூறுகின்றார்ஆசிரியர்மற்றநாடுகளில்சாவோலை தீட்டிய செய்திகளை விரிவாகக்கூறி நம் நாட்டில் சாகவேண்டிய, செத்துக் கொண்டிருக்கின்ற, செத்துப்போன பழமைகளுக்கு நாம் சாவோலை தீட்டிப் புது வாழ்வு பெற வேண்டிய அவசியத்தை அழகாக வற்புறுத்துகின்றார். யாவரும் படித்தற்குரிய ஒரு நூல்.

## பலிபீடம் நோக்கி!

தீட்டியவர்: மு. கருணாநிதி.
விலை அணா ஆறு.
வெளியிடுவோர்: எரிமலைப்பதிப்பகம்,
துறையூர், திருச்சி.

ஆரியக் கைப்பாவைகளாக இருந்தால்—ஆண்டால் வாழ்வுண்டு. அதுவும் உறுதியற்ற வாழ்வு. இன்றேல் பலிபீடம் நோக்கி விரைந்து பலியாக வேண்டியதே. இம்முடிவை தஞ்சை நாயக்கர் அரசின் அழிவிலிருந்து படம் பிடித்துக் காட்டுகின்றார் ஆசிரியர். படப்பிடிப்பில் விறுவிறுப்பான ஓட்டமும், தெளிவான ஒலிப்பதிவும் ஒளிப்பதிவும், காட்சி ஜோடனைகளும், பின்னணிக் கீதங்களும் நன்கு அமைந்திருக்கின்றன.

யாவரும் காணவேண்டியது. ஆம்! நாமக்கல்லார் காமராஜர் உள்படத்தான். இன்புறுவதற்காக அல்ல. விழிப்புறுவதற்காக.

## புரளி

வாரவெளியீடு.
ஆசிரியர்: புரளியார்.
விலை அணா இரண்டு.
சேலம்.

சமுதாயத்தின் பல துறைகளிலும் சிந்தனத்தை உண்டாக்கவேண்டிய பல கட்டுரைகளும் கதைகளும் காணப்படுகின்றன. நகரத்திலும் நாட்டிலும் தாண்டவமாடும் பல ஊழல்களைக் கண்டிப்பதே இதன் நோக்கமென அறிகின்றோம்.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE.

# எங்களிடம் கிடைக்கும் நூல்கள்!

★

## தலைவர் பெரியார்.

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| திருச்சிப்பிரசங்கம் | 0 | 2 | 0 |
| பெண்கள் அலங்காரப் பொம்மைகளா? | 0 | 1 | 0 |
| காங்கரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம் | 0 | 1 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |
| ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுக்கட்சியா? | 0 | 1 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திராவிடர்-ஆரியர் உண்மை | 0 | 0 | 6 |

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

| | | | |
|---|---|---|---|
| புராணங்கள் | 0 | 8 | 0 |
| ராவணப்பெரியார் | 0 | 8 | 0 |
| புநரஷ்பா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |

## கவிஞர் பாரதிதாசன்.

| | | | |
|---|---|---|---|
| பாரதிதாசன் கவிதைகள் | 3 | 8 | 0 |
| பாண்டியன் பரிசு | 3 | 8 | 0 |
| கற்கண்டு | 2 | 0 | 0 |
| எதிர்பாராத முத்தம் | 1 | 4 | 0 |
| அழகின் சிரிப்பு | 1 | 0 | 0 |
| நல்லதீர்ப்பு | 0 | 10 | 0 |
| தமிழ் இயக்கம் | 1 | 0 | 0 |
| காதல் நினைவுகள் | 0 | 12 | 0 |
| குடும்பவிளக்கு I | 0 | 10 | 0 |
| ,, II | 0 | 6 | 0 |
| இசையமுது | 0 | 12 | 0 |
| அமைதி | 0 | 8 | 0 |
| இரணியன் அல்லது இணையற்ற வீரன் | 0 | 8 | 0 |

## புதுவை சிவம்

| | | | |
|---|---|---|---|
| கோகிலராணி (நாடகம்) | 1 | 0 | 0 |
| மறுமலர்ச்சிக் கவிதைகள் | 0 | 8 | 0 |
| தன்மதிப்புப் பாடல்கள் | 0 | 6 | 0 |

---

| | | | |
|---|---|---|---|
| பெரியார் பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| மெய்ஞ்ஞானமுறையும், மூடநம்பிக்கையும் 2ம் பாகம் | 0 | 5 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் 2ம் பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| சமதர்ம கீதம் | 0 | 1 | 0 |

## அறிஞர் அண்ணாதுரை.

| | | | |
|---|---|---|---|
| ரோமாபுரி ராணிகள் | 2 | 4 | 0 |
| கம்பரசம் | 1 | 8 | 0 |
| குமரிக்கோட்டம் | 1 | 0 | 0 |
| வர்ணாஸ்ரமம் | 0 | 12 | 0 |
| விடுதலைப்போர் | 1 | 0 | 0 |
| கற்பனைச்சித்திரம் | 1 | 0 | 0 |
| திராவிடர் நிலை | 0 | 6 | 0 |
| ஏ தாழ்ந்த தமிழகமே | 0 | 8 | 0 |
| ஆரியமாயை | 1 | 0 | 0 |
| நல்ல தீர்ப்பு | 0 | 4 | 0 |
| நாடும் ஏடும் | 0 | 6 | 0 |
| மே தினமும் திராவிடர் கழகமும் | 0 | 5 | 0 |

## கோரநாதன்

| | | | |
|---|---|---|---|
| சினிமாவில் கடவுள்கள் | 0 | 4 | 0 |
| ஈட்டிமுனை | 0 | 8 | 0 |
| கோவில்களை மூடுங்கள் | 0 | 6 | 0 |

## மு. கருணாநிதி

| | | | |
|---|---|---|---|
| பலிபீடம் நோக்கி | 0 | 6 | 0 |
| பெரிய இடத்துப்பெண் | 0 | 8 | 0 |

## விவேகி

| | | | |
|---|---|---|---|
| ஐக்கிய திராவிடம் | 0 | 12 | 0 |
| நாம் யார்? | 0 | 8 | 0 |
| கனவில் கண்ட கவி | 0 | 10 | 0 |

## தில்லை வில்லாளன்

| | | | |
|---|---|---|---|
| சாவோலை | 0 | 8 | 0 |

## சோக்கலிங்கம்

| | | | |
|---|---|---|---|
| ஓடிப்போனவள் கதை | 0 | 4 | 0 |

## ஈரோடு பாலகுரு

| | | | |
|---|---|---|---|
| புரட்சி முரசு | 0 | 12 | 0 |

## திருச்சி கேசரி

| | | | |
|---|---|---|---|
| ஆகஸ்டு-15 | 1 | 0 | 0 |

★

| | | | |
|---|---|---|---|
| ஈ. வெ. ரா. உலகப் பெரியார் | 0 | 3 | 0 |
| திராவிடநாடு பிரிவினை | 0 | 2 | 0 |

---

**பாதித் தொகையாகிலும் முன்பணமாக அனுப்பப்படுகிற ஆர்டர்களை மட்டுமே கவனிக்கப்படும்.**

வியாபாரிகளுக்கு மட்டும் கமிஷன் உண்டு.

---

**நாதன் கம்பெனி லிமிடெட்,**

**கச்சேரிவீதி, ஈரோடு.**